பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆனி 05 திங்கட்கிழமை (19.06.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 203

# அப்பாவி மக்கள் மீதான தாக்குதல், கைது குறித்து உடன் தகவல் தந்தால் படையினர் மீது நடவடிக்கை

## மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளிடம் படைத் தளபதி உறுதிமொழி

யாழ்ப்பாணம்,ஜூன்19

குடாநாட்டில் படையினரால் அப்பாவி மக்கள் தாக்கப்பட்டாலோ, கைது செய்யப்பட்டாலோ அவை குறித்து உடன் தகவல் தந்தால் சம்பந்தப்பட்ட படையினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகளிடம் யாழ்.மாவட்ட படைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் து.சுவேந்திர ராஜா, சட்ட ஆலோசகர் எம்.றெமேடியஸ் ஆகியோர் படைத் தளபதியை நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் பலாலியில் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்புக் குறித்து யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவின் இணைப்பதிகாரி தெரிவித்ததாவது:-

பொதுமக்கள் படையினரால் தாக்கப்படுதல் மற்றும் கைது செய்யப்படுதல் தொடர்பாக பல முறைப்பாடுகள் கிடைக்கின்றன என இந்தச் சந்திப்பில் தெரிவித்தோம். இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக உடன் தகவல் தந்தால் நடவடிக்கை எடுப்பேன் என்றும் - மனித உரிமை ஆணைக்குழுவினர் இது தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ள பூரண ஆதரவு வழங்கப்படும் என்றும் - படைத் தளபதி உறுதிமொழி வழங்கினார்.

மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் இராணுவ முகாம்களுக்குச் சென்று தமது புலன் விசாரணைகளை நடத்த ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தளபதி உறுதியளித்தார்.

கடற்படையினரால் மனித உரிமைகள் மீறப்படும் சம்பவங்கள் குறித்து முறைப்பா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் நேற்று பரவலாகத் தேடுதல்

வலி.வடக்கு,ஜூன்19

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் படையினர் நேற்று திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல்களை மேற்கொண்டனர்.

வடமராட்சி, தென்மராட்சி மற்றும் வலிகாமத்தில் கொக்குவில், கோண்டாவில் பகுதிகளில் இந்த தேடுதல் நடத்தப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சிகிச்சைக்காக சரத் பொன்சேகா சிங்கப்பூர் பயணம்

கொழும்பு,ஜூன்19

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூர் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இராணுவத் தலைமையகத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இவர் படுகாயமடைந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## காரைநகர் கடலில் போர் ஒத்திகை

யாழ்ப்பாணம்,ஜூன் 19

காரைநகர், மாதகல் மற்றும் காங்கேசன்துறை கடல் பிராந்தியத்தில் நேற்று பெரும் குண்டுச் சத்தங்கள் கேட்டன.

கடற்படையினரும் விமானப்படையினரும் இணைந்து போர் ஒத்திகையில் ஈடுபட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேயின் தூதுவர் விரைவில் வன்னிக்கு!

## நிலைமைகள் குறித்து நேரில் கலந்துரையாட

கொழும்பு, ஜூன் 19

**கொழும்புக்கான நோர்வேத் தூதர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும், இலங்கை யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுத் தலைவர் உல்ப் ஹென்றிக்ஸனும் மிகவிரைவில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களோடு விரிவான பேச்சுகளை நடத்துவர் என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.**

**தற்போதைய களநிலைவரங்கள் குறித்து விடுதலைப்புலிகளின் தலைவர்களோடு விரிவான கலந்துரையாடலில் ஈடுபடுவது அவர்களது நோக்கமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.**

தற்போது களத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையில் பதற்றம் மற்றும் போர்ச் சூழலைத் தவிர்த்தல் -

அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் நகர்த்துவதற்கான வாய்ப்புகளை ஆராய்தல் -

விடுதலைப் புலிகளைத்தடை செய்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இடம் பெற்றிருக்கின்ற சுவீடன், பின்லாந்து, டென்மார்க் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் பணியாற்றுவது

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு வெளித் துறைமுகத்தை தாக்குவதே புலிகளின் திட்டமாம்!

கொழும்பு, ஜூன் 19

நீர்கொழும்பு, ஜா-எல கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் காலை படகில் வந்திறங்கிய விடுதலைப் புலிச்சந்தேகநபர்கள் கொழும்பு வெளித் துறைமுகத்தைத் தாக்கும் இலக்குடனேயே வந்திருக்கின்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளதென கொழும்பிலுள்ள பாதுகாப்புத் துறை உயர்மட்ட வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

நேற்றுமுன்தினம் மேற்படி கடற்பரப்பில் வந்த படகொன்றில் இறங்கிய இரண்டு சந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கலைஞரின் உத்தரவின் பேரில்

# மண்டபம் ஈழ அகதிகள் முகாமுக்கு இரு அமைச்சர்கள் நேரில் விஜயம்

இலங்கையிலிருந்து தமிழகம் வரும் ஈழ அகதிகள், தமிழகம் வந்தவுடன் தங்க வைக்கப்படும் மண்டபம் இடைத்தங்கல் முகாமில் புனரமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளைச் செய்வதற்காக சுமார் 66 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தமிழக அரசு அறிவித்துள்ளது.

இலங்கை அகதிகள் நலன் குறித்து ஆராயுமாறு தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி விடுத்த பணிப்புரைக்கமைய இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தில் உள்ள அகதிகள் இடைத்தங்கல் முகாமுக்கு தமிழக அமைச்சர்களான சுப. தங்கவேலன், கே.ஆர். பெரிய கருப்பன் ஆகியோர் சென்றனர்.

இதனையடுத்து, செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்ட தகவலை வெளியிட்ட தமிழக அமைச்சர்கள், மண்டபம் அகதி முகாமில் 3,200 அகதிகள் தற்போது தங்கியுள்ளனர் எனவும் அவர்கள் குறித்து தமிழக அரசு விசேட கவனஞ்செலுத்துமென்றும் கூறினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கெப்பிட்டிக்கொல்லாவை அருகில்

# துட்டுவெவவில் கிளைமோர் மூன்று பொலீஸார் உயிரிழப்பு

வவுனியா, ஜூன் 19

வவுனியா - கெப்பிட்டிக்கொல்லாவ வீதியில் துட்டுவெவ என்னுமிடத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் மூன்று பொலீஸார் கொல்லப்பட்டனர்.

தண்ணீர் பவுஸர் ஒன்றே கிளைமோரில் சிக்கியதாகவும், இதில் பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும், றிசேவ் பொலீஸார் இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் எனவும் வவுனியா பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து துட்டுவெவ பகுதியில் இராணுவத்தினரும், பொலீஸாரும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழகம் செல்லும் அகதிகளுக்கு இனி தூத்துக்குடியில் முகாம்கள்

தூத்துக்குடி, ஜூன் 19

போர் அச்சம் காரணமாக இலங்கையிலிருந்து படகுகள் மூலம் இராமேஸ்வரம் வரும் அகதிகளை தூத்துக்குடி மாவட்ட முகாம்களில் தங்க வைப்பதற்கு தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

இலங்கையிலிருந்து வரும் ஏராளமான அகதிகள் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். நாளுக்கு நாள் அகதிகள் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருவதால், நெல்லை, தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களிலுள்ள [illegible] முகாம்களுக்கு இனி வரு[illegible]வர்களை அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் தாளமுத்து நகர் அருகேயுள்ள தாப்பாத்தி, குளத்துவாய்ப்பட்டி ஆகிய மூன்று இடங்களில் இலங்கை அகதிகள் முகாம்கள் தற்போது உள்ளன. அவற்றில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட அகதிகள் தங்கியுள்ளனர். இலங்கையிலிருந்து இனி இராமேஸ்வரம் வரும் அகதிகளை தூத்துக்குடி மாவட்ட முகாம்களில் தங்க வைக்க அரசு முடிவு செய்துள்ளது. அதற்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# முருகன் - நளினி ஆகியோரின் உடல்நிலை மோசமாகின்றது

வேலூர், ஜூன் 19

இந்தியாவில் தங்கிக் கல்வி பயில்வதற்கு தமது மகளுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமெனக் கோரி உண்ணாவிரதமிருந்து வரும் ராஜீவ்காந்தி கொலைக் குற்றவாளிகளான முருகன் - நளினி தம்பதிகளின் உடல்நிலை மோசமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. உடல்நலம் பாதிக்கப்பட்டு நேற்று முன்தினம் நளினி

(12 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சுவிஸ் இந்து ஆலயம் ஒன்றில் இடம்பெற்ற பிரார்த்தனைகளை அடுத்து அதில் கலந்துகொண்டோர் விடுதலைப் புலிகளை ஆதரிக்கும் பதாகைகளை தாங்கியிருப்பதையும் சிவாச்சார்யார்கள் வேள்வி யாகங்களில் ஈடுபட்டிருப்பதையும் படங்களில் காணலாம்.

# கவனஈர்ப்புப் போராட்டத்தின் நிறைவை முன்னிட்டு சுவிஸ் ஆலயங்களில் வேள்வி, சர்வமதப் பிரார்த்தனை

உலகத் தமிழர்கள் ஒன்றுகூடி நடத்தி வரும் உரிமைக்குரல் போராட்டத்தின் தொடர்ச்சியாக கடந்த 12ஆம் திகதி முதல் 16ஆம திகதிவரை நடைபெற்ற அனைத்துலக கவன ஈர்ப்பு கறுப்புப்பட்டி பேராட்டத்தின் நிறைவை முன்னிட்டு சுவிஸிலுள்ள ஆலயங்களில் வேள்வி, யாகங்களும் சர்வமதப் பிரார்த்தனைகளும் நடத்தப்பட்டன.

தமிழர் தாயகத்தில் அதிகரித்து வரும் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்தக் கோரியும் -

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது நீதியற்ற முறையாக ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடையை உடனடியாக நீக்குமாறும் கோரி- புலம்பெயர் தமிழர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்திவருகின்றனர்.

சுவிஸ் நாட்டவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடத்தப்பட்ட கறுப்புப் பட்டி கவன ஈர்ப்புப் போராட்டத்தின் நிறைவில் சுவிஸில் அமைந்திருக்கக் கூடிய 22 கோயில்களிலும் மற்றும் ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடுகளும் கூட்டுப்பிரார்த்தனைகளும் நடத்தப்பட்டன.

சூரிச் சைவத் தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் ஒருங்கிணைக்கப்பட்ட வழிபாட்டு நிகழ்வில் சூரிச் சிவன் கோயில், பேர்ண் முருகன் ஆலயம், லுசெர்ண் அம்மன் கோயில், பாசல் இந்து ஆலயம், லவுசாண் பிள்ளையார் கோவில் ஆகியவற்றில் தமிழர் உரிமைப்போராட்டம் வெற்றிவாகை கொள்வதற்கு விசேட யாக பூசைகளும் அமைதி வேள்விப் பூசைகளும் நடைபெற்றன.

இந்த சிறப்பு வழிபாட்டு நிகழ்வுகளை சுவிஸ் நாட்டு ஊடகங்கள் நேரடியாகச் சென்று நிகழ்வுகளை பதிவுசெய்து சுவிஸ் நாட்டவருக்கு வெளிப்படுத்தினர்.

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தின் உச்ச வடிவமான உரிமைக்குரல் பல வடிவந் தாங்கி தமிழர் தாயக விடுதலைக்கு ஆகுதியாகும் உணர்வுப் போராட்டத்தின் உயிர் வடிவமே இப்பிரார்த்தனை மூலம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக சுவிஸ் தமிழ்ச்சமூக கத்தோலிக்க ஆன்மீக பணியகத்தினால் அயன்ஸ் சீலடன் கத்தோலிக்க தேவாலயத்தில் அமைதியும் சமாதானமும் வெற்றி வாழ்வும் வேண்டி திருப்பலி ஒப்புக்கொடுத்தல் நிகழ்வும், ஆண்டகை பிரார்த்தனை வழிபாடும் நடைபெறவுள்ளன.

இதனிடையே ஈழத்தமிழரின் வாழ்வு விடிவு பெறவும் தமிழீழ விடுதலை போராட்டத்தின் மீது இன்றிருக்கும் அனைத்துத் தடைகளையும் உடைத்தெறிந்து தமிழர் போராட்டம் வெற்றி பெறவும் -

தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழர்களின் ஆத்மாவான தமிழீழத் தேசியத் தலைமையையும் இறையருள் ஆசீர்வதிக்குமாறு வேண்டியும்-

கோரமாகப் படுகொலை செய்யப்பட்ட பிஞ்சுக் குழந்தைகள் தமிழீழ மக்கள் ஆகியோரின் ஆத்ம சாந்திக்காகவும் சூரிச் கிருஸ்ணன் கோயிலில் விரைவில் விசேட கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வும் வழிபாடுகளும் நடைபெற உள்ளன.

## 'ஆமி சுரங்க' சுட்டுக் கொலை

காலி, ஜூன் 19

தென்னிலங்கையை ஆட்டுவித்து வந்த பாதாள உலகக் கோஷ்டி யின் பிரபல புள்ளியான 'ஆமி சுரங்க' நேற்றுமுன்தினம் மாலை பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பல்வேறு கொலை, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்தவர் எனக் கருதப்படும் இவரைக் கைது செய்வதற்காக பொலீஸார் நீண்ட காலம் தேடுதல் நடத்திவந்தனர். இந்நிலையில் 'ஆமி சுரங்க' செவனகலவில் உள்ள கரும்புத் தோட்டமொன்றில் பதுங்கி இருக்கிறார் என்று பொலீஸாருக்கு இரகசியத் தகவலொன்று கிடைத்தது.

இதனையடுத்து செவனகலவிற்கு விரைந்த பொலீஸ் கோஷ்டி 'ஆமி சுரங்க' இருந்த இடத்தைச் சுற்றி வளைத்து அவரைக் கைது செய்தது. பின்னர் விலங்கிடப்பட்ட இவர் பொலீஸாரால் அழைத்துச் செல்லப்படவிருந்த சமயம் -விலங்கிடப்பட்டிருந்த நிலையில் - பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரை மடக்கிப் பிடித்து தப்பியோட எத்தனித்துள்ளார் எனக் கூறப்பட்டது.

இதனையடுத்து 'ஆமி சுரங்க'வின் பிடியிலிருந்து பொலீஸ் கான்ஸ்டபிளைக் காப்பாற்றுவதற்காக பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர் என்றும், இதனால் ஆமி சுரங்க அதே இடத்தில் உயிரிழந்தார் என்றும் பொலீஸ் தரப்பில் விளக்கம் கூறப்படுகின்றது. (க)





பேசாலை வெற்றிமாதா தேவாலயத்தில் பொதுமக்கள் படுகொலைசெய்யப்பட்ட இடங்கள் துப்புரவு செய்யப்படுவதையும் பேசாலை கடற்கரையில் தீக்கிரையாக்கப்பட்ட வள்ளங்களையும் படங்களில் காணலாம்.

## கரவெட்டி, நெல்லியடிப் பகுதிகளில்
# பொதுமக்களைப் பயன்படுத்தி வீதி துப்புரவாக்கும் படையினர்

கரவெட்டி,ஜூன்19

கரவெட்டி, நெல்லியடிப் பகுதி பிரதான வீதிகளில் வீதிக் கடமையில் ஈடுபட்டுள்ள படையினர், அப்பகுதியூடாகப் பயணிக்கும் பொதுமக்களைப் பயன்படுத்தி வீதி துப்புரவாக்கும் பணிகளில் ஈடுபடுத்தி வருவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில நாள்களாக இத்தகைய நடவடிக்கைகளில் படையினர் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர் என்றும் - கூறப்பட்டது.

இதற்கிடையில் - நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ்.- பருத்தித்துறை பிரதான வீதியில், நெல்லியடி மூத்த விநாயகர் ஆலயம், விழுந்தாலடி ஆகிய பகுதிகளில் நிலைகொண்டிருந்த படையினர், அப்பகுதியூடாக கால்நடையாகவும் சைக்கிள்களிலும் பயணித்த பொதுமக்களை வழிமறித்துள்ளனர்.

பின்னர், வீதியோரங்களில் உள்ள பற்றைகள், செடி கொடிகளை வெட்டித் துப்புரவு செய்யுமாறு பொதுமக்களை அறிவுறுத்தினர் என்றும் - படையினரது அறிவுறுத்தலை அடுத்து பொதுமக்கள் வீதி துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர் என்றும் - கூறப்பட்டது.

அவசர தேவைகளின் நிமித்தம் பயணித்தவர்கள், வைத்தியசாலைகளுக்குச் சென்றவர்கள் எனப் பலரும் படையினரது இத்தகைய செயற்பாட்டால் நேற்று பெருஞ்சிரமத்துக்கு உள்ளாகினர். (70)

# மேஜர் துளசி பயிற்சிப் பாசறையில் 5 ஆவது மக்கள் படைப் பயிற்சி

கிளிநொச்சி,ஜூன்19

கிளிநொச்சி மேஜர் துளசி பயிற்சிப் பாசறையில் 350 பேரைக்கொண்ட மக்கள் படைப் பயிற்சி நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மேஜர் துளசி பயிற்சிப்பாசறையில் நடைபெற்றுவரும் மக்கள் படை பயிற்சியின் 5 ஆவது அணியினருக்கான பயிற்சியே நேற்று ஆரம்பமாகியது.

இந்நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியை அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றினார்.

மேஜர் துளசியின் திருவுருவப்படத்துக்கு புலிகளின் குரல் பொறுப்பாளர் நா.தமிழன்பன் ஈகைச்சுடரேற்றினார்.

தொடர்ந்து பயிற்சிகளை சோ.தங்கன் தொடக்கி வைத்தார். தொடக்கவுரையை நா.தமிழன்பன் நிகழ்த்தினார்.

# நெல்லியடி பஸ் நிலையப் பகுதியை படையினர் படம் பிடித்ததால் பதற்றம்

கரவெட்டி,ஜூன்19

நெல்லியடி பஸ் நிலையப் பகுதி படையினரால் திடீரென புகைப்படம் பிடிக்கப்பட்டதை அடுத்து, அப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

நேற்றுமாலை 4 மணியளவில் யாழ். - பருத்தித்துறை வீதியூடாக பலாலியிலிருந்து நாகர் கோயில் நோக்கி பஸ்களில் பயணம் செய்த படையினர் நெல்லியடி சந்தைப் பகுதியில் திடீரென பஸ்களை நிறுத்தினர் என்றும் -

இதனையடுத்து பஸ்களில் இருந்து இறங்கிய படையினர், நெல்லியடி பஸ் நிலையப் பகுதியைப் படம் பிடித்துள்ளனர்.

இதனையடுத்து, அப்பகுதியில் காணப்பட்ட பொதுமக்கள் பதற்றமடைந்ததுடன், அனர்த்தம் எதுவும் இடம்பெற்றுவிடுமோ என்ற அச்சத்தில் அங்கிருந்து வெளியேறியதைக் காண முடிந்தது. (70)



மக்கள் படைப் பயிற்சி ஆரம்ப நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடி ஏற்றி வைக்கப்படுவதையும், புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழன்பன் தொடக்கவுரை நிகழ்த்துவதையும் பயிற்சியில் ஈடுபட்டவர்களையும் படங்களில் காணலாம். (நன்றி: புதினம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 2030, 222 2083, 222 3837

# உண்மைகளை மூடி மறைக்கும் தென்னிலங்கை ஊடகங்கள்

மன்னார்-பேசாலை கடற்பரப்பில் நேற்று முன்தினம் அதிகாலை இலங்கைக் கடற்படையினருக்கும், தமீழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த உக்கிரச் சமரில் தமக்கு ஏற்பட்ட இழப்பின் வெப்பி யாரத்தை - ஆற்றாமையை - கடற்கரையோரத் தமிழ் மக்களுக்கு எதிராக, அப்பாவிகளுக்கு எதிராக வெறியாட்டமாக வெளிப்படுத்தி யிருக்கிறது ஸ்ரீலங்கா கடற்படை.

அப்பாவி மீனவர்கள் மீதும், யுத்தத்தில் இடையில் சிக்குவதிலிருந்து தப்புவதற்காக தேவாலயத்தினுள் தஞ்சம் புகுந்திருந்த மக்கள் மீதும் கடற்படையினர் எனக் கருதப்படுவோர் மிலேச்சத்தனமாக மேற் கொண்ட கொடூரத் தாக்குதலில் ஏழு பேர் உயிரிழந்திருக்கின் றனர்; ஐம்பதுக்கும் அதிகமானோர் காயமடைந்திருக்கின்றனர்.

பேசாலை வெற்றி மாதா ஆலயத்துக்குள் நீலச் சீருடை யினர் வீசிய கிரனேட்டினால் அங்கு அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருந்த ஐம்பதுபேர் படுகாயமடைந்து சுருண்டு வீழந்தி ருக்கின்றனர். வெற்றி மாதா ஆலயம் இரத்தக்காடாகியி ருக்கின்றது.

மன்னார் மாவட்ட ஆயர் வண. இராயப்பு ஜோசெப், அரசாங்க அதிபர் விஸ்வநாதன் விஸ்வலிங்கம், உதவி அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமெல் மற்றும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு உறுப் பி னர்கள் போன்றோர் இந்த இடங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டிருக்கின் றனர். மன்னார் மாவட்ட மேலதிக நீதிவானும் நேரடியாக சம்பவ இடங்களைப் பார்த்து விசாரணை நடத்தியிருக்கின்றார்.

இந்த அனர்த்தங்களைத் தவிர, கடற்கரையில் இருந்த 110 வாடி வீடுகளும், நாற்பது படகுகளும் கூட கடற் படையினரால் எரித்து நாச மாக்கப்பட்டன என்றும் பதினைந்துக்கும் அதிகமான வாகனங்களும் சேதப்படுத் தப்பட்டன என்றும் கூறப்படுகின்றது.

இவ்வளவு அசம்பாவிதங்களும் - அனர்த்தங்களும் - இலங்கை அரச கட்டுப்பாட்டில் உள்ள மேற்குக் கரையில் நடந்தேறி இருபது மணித்தியாலம் கழிந்த பின்னரும் -

கண்காணிப்புக் குழுவினர், அரச அதிபர், நீதிவான் போன்ற அதிகாரிகள் நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டு உண்மைகளைக் கண்டறிந்த பின்னரும்-

தென்னிலங்கை சிங்கள, ஆங்கில ஊடகங்களுக்கு சீருடையினரின் இந்த வெறியாட்டம் தெரியாமல் போனது - அல்லது தெரியாதமை போல அவை நடந்து கொள்வது - இந்த நாட்டின் துரதிஷ்டம்தான்.

இலங்கைத் தீவின் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு - சமாதான இணக்கப்பாடு - எட்டப்பட முடியாத இக்கட்டு நிலைமை உருவாகியுள்ளமைக்கு இத்தகைய பின்ன டைவுப் போக்கே ஒரு முக்கிய - பிரதான - காரணமாகும்.

நேற்று முன்தினம் காலையில் மன்னார் - பேசாலை கடற்பரப்பில் கடற்படையினருக்கும், கடற்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற உக்கிரச் சமரில், கடற்புலிகளுக்கு அதிக சேதம் என்ற சாரப்பட இலங்கைப் பாதுகாப்பு வட் டாரங்கள் வெளியிட்ட தகவல்களை அறிந்து கொண்டு, அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்ட தென் னிலங்கை ஊடகங்களுக்கு, பேசாலையில் பொதுமக் களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வெறியாட்டம் தெரி யவராமல் போயிருப்பது வியப் புக்குரியது.

கெப்பிட்டிக்கொலாவையில் அப்பாவிப் பொது மக்கள் 64 பேரை கொடூரமாகக் கொன்றொழித்து, காட்டுமிராண்டித் தனம் புரிந்தவர்கள் யார் என்பது நிரூபணமாக முன்னரே, அதைச் செய்தவர்கள் விடுதலைப் புலிகள்தாம் என்று உறுதிப்படுத்தி, குற்றச்சாட்டை கற்பிதம் பண்ணி, அந்தக் கொடூரக் கொலைகளால் ஏற்பட்ட இனப்பதற்றத்தை ஊதிப் பெருப்பித்து 'திருகுதாளம்' புரியும் தென்னிலங்கை ஊட கங்க ளுக்கு தமது அரசின் படைகள் புரிந்த 'பேசாலைத் திருவிளையாடல்கள்' தெரியாமல் போனமை விளங்கிக் கொள்ள முடியாத புதிர்தான்.

திருகோணமலை நகரில் ஐந்து அப்பரவித் தமிழ் மாணவர்கள் அவர்களின் தலைக்கு மிக அருகில் இயந்திரத் துப்பாக்கி வைத்து படுமோசமாக சுட்டுக் கொல்லப்பட்ட சமயம், அந்த மாணவர்கள் எடுத்து வந்த கிரனேட் வெடித்தே அவர்கள் உயிரிழந்தனர் என்று கதையைத் திசை திருப்பி, கொலை அட்டூழியம் புரியும் சீருடையினரைக் காப்பாற்றும் தென்னிலங்கை ஊட கங்களே, பெரும்பான்மைச் சிங்களவர்களின் கருத்துரு வாக்கிகளாக இருக்கும் வரை தெற்கு மக்களுக்கு இலங்கை இனப்பிரச்சினையின் அடிப்படை உண்மை கள், நிலைவரங்கள், நியாயங்கள், அநியாயங்கள் எல் லாம் தெரியப் போவதில்லை.

மொத்தத்தில் பொய்களாலும், புனைகதைகளாலும் உண்மைக்குச் சமாதி கட்டி, தமிழர் தரப்புக்கு இகழ்ச்சி ஏற்படுத்தத் திட்டமிட்டு முடுக்கி விடப்படும் பரப்புரைக ளின் ஊற்றுக் கண்ணாக தெற்கு ஊடகங்கள் செயற் படும் வரை இனச்சமர் என்ற சாபக் கேட்டிலிருந்து இலங் கைத் தீவுக்கு மீட்சியே இல்லை என்பது நிச்சயம்.

மன்னார், பேசாலைச் சம்பவங்கள் தொடர்பான உண் மைகளுக்கு தென்னிலங்கை ஊடகங்களில் காட்டப் பட்ட இருட்டடிப்பு அதை மீள உறுதிப்படுத்துகின்ற ஒரு நடவடிக்கைதான். அவ்வளவே!

# அமைதிப் பேச்சை ஆரம்பித்து வன்முறைக்கு முடிவுகட்டுக!

## போர் எதிர்ப்பு அமைப்பு இருதரப்புக்கும் வற்புறுத்து

கொழும்பு, ஜூன்19

அரசும் - புலிகளும் பற்றுறுதியோடும் உண்மையாகவும் மேற்கொள்கின்ற செயற் பாட்டின் மூலமே மீண்டும் அமைதி நிலையைத் தோற்றுவிக்க முடியும். அரசும் புலிகளும் உடனடியாகவே நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்க முன்வரவேண் டுமென வலியுறுத்துகின்றோம்.

தேசிய போர் எதிர்ப்பு முன்னணி விடுத் துள்ள அறிக்கையொன்றில் இவ் வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நிகழுகின்ற வன்செயல்க ளுக்கு காரணமாகவிருக்கும் மூன்றாம் தரப்பினர் தொடர்பான புலன் விசாரணை கள் நடத்துவதற்கென நிலையியல் ஆணைக் குழுவொன்றை நியமிக்கும்படியும் அரசை இவ்வமைப்பு வற்புறுத்தியுள்ளது.

கெப்பிட்டிக்கொல்லாவ பிரயாணி கள் பஸ் மீது நடத்தப்பட்ட கிளைமோர் குண்டுத்தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ள போர் எதிர்ப்பு முன்னணி அது ஒரு மிருகத்தரமான ஈவிரக்க மற்ற செயல் என்று கண்டித்துள்ளது.

அப்பாவிப் பொதுமக்களை குறி வைக்கும் செயற்பாடுகளை விடுத லைப் புலிகள் இனிமேலும் மறுக்கமு யாது என்று குறிப்பிட்டுள்ள முன் னணி, வியாழக்கிழமை நிகழ்ந்துள்ள சம்பவம் மிக மோசமான ஆத்திரம் ஊட்டும் செயல். எந்தச் சூழ்நிலையி லும் நியாயப்படுத்த முடியாதது என்று குறிப்பிட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் இடம்பெற்று வரும் சட்டவிரோத படுகொலை களைக் கண்டித்துள்ள அவ்வமைப்பு அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஆயுதக்குழுக்களும் துணைப்படைக ளும் அச்சமின்றி கொலைகளை செய் வதற்கு இருந்துவரும் சூழ்நிலைகளை யும் கண்டித்துள்ளது.

நிரந்தர அமைதிக்கான பேச்சுகள் மூலமே மேற்கொண்டும் வன்முறை கள் விரிவடையாமல் காப்பாற்றமுடி யும். இருதரப்பினரையும் உடனடியாக அமைதிப்பேச்சுகளை ஆரம்பிக்கும்படி வற்புறுத்துகின்றோம்.

இவ்வாறு போருக்கு எதிரான முன் னணி கூறியுள்ளது. (ப)

# இலங்கை அரசின் படுகொலைகளை நிறுத்தக்கோரி ஆஸி.நாடாளுமன்றில் தீர்மானம் நிறைவேற்றுக!

## அங்குள்ள 12 தமிழ் அமைப்புகள் கூட்டாகக் கோரிக்கை

சிட்னி,ஜூன்19

இலங்கை அரசின் ஆதரவுடன் வடக்கு - கிழக்கில் இடம்பெறுகின்ற நீதிக்குப் புறம்பான தமிழ் மக்கள் மீதான இனப் படுகொலையைக் கண்டிக்குமாறும் இக்கொலைகளை நிறுத்த இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறும் கோரி ஆஸ்திரேலிய நாடாளுமன்றதில் தீர்மானம் நிறைவேற்றவேண்டும்.

ஆஸ்திரேலியாவில் குவீன்ஸ்லாந்தில் இயங்கும் 12 தமிழ் அமைப்புகள் ஆஸ் திரேலிய அரசை மேற்கண்டவாறு கோரி யுள்ளன.

அந்த அமைப்புகள் கூட்டாக ஆஸ் திரேலிய அரசுக்கு அனுப்பியுள்ள கடி தத்தில் இந்தக் கோரிக்கையை விடுத் துள்ளன.

அந்த அமைப்புகள் விடுத்துள்ள கோரிக்கைகள் வருமாறு:-

* இலங்கை அரசின் ஆதரவுடன் இடம்பெறுகின்ற நீதிக்குப் புறம்பான தமிழ்ப் பொதுமக்களின் இனப்படு கொலையைக் கண்டித்தல்.
* இலங்கைத் தமிழர் தங்கள் வாழ் வைத் தாங்களே நிர்ணயிக்கும் ஆர் வம், தம் விதியைத் தாமே கட்டுப்படுத் தும் ஆர்வம்,தாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தம் தாய் மண்ணைத் தாமே ஆளவிரும்பும் ஆர்வம் ஆகிய ஆர்வங் களை ஏற்றலும் தம் தாய் மண்ணை எவ ருக்கும் விட்டுக் கொடுக்காது தக்கவைக் கும் உரிமையும் சுயநிர்ணய உரிமையும் அவர்களுக்கு உண்டு என்பதை ஏற்றலும்.
* பெப்ரவரி 2002ஆம் ஆண்டு கைச்சாத்திட்ட போர் நிறுத்த ஒப்பந் தத்தை இரு தரப்பும் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டிய தேவையை யும், முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையையும் நிராயுத பாணிகளான அப்பாவிப் பொதுமக்கள் மீது அரச ஆதரவுடன் கட்டவிழ்த்து விடப் பட்டுள்ள வன்முறைகள், கொலை கள், மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தல்.
* தமிழ் மக்களின் தேசியப் பிரச்சி னைக்கும் அவர்களின் அன்றாட வாழ்வுப் பிரச்சினைக்கும் நோர்வே, ஆஸ்திரேலியா போன்ற சர்வதேச நாடுகளின் ஆதரவுட னும் மேற்பார்வையுடனும் அமைதிப் பேச்சுவார்த்தைகள் மூலம் நீதியான நேர்மையான தீர்வைக்காண இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்தல்.
* இலங்கைத் தமிழரின் துயர்களுக்கு நிரந்தர அமைதி வழித் தீர்வைக்காண ஆஸ்திரேலியா அரசின் ஈடுபாட்டை யும் பங்களிப்பையும் காட்டுவதற்கு முன் னோடியாக, இலங்கைக்கு உண்மைத் தள நிலையை அறிய நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை அனுப்பல்.

# மயிலியற்புலம் கிராமம் அபிவிருத்திக்குத் தெரிவு

வலி.மேற்கு,ஜூன்19

'கமி அருண' திட்டத்தின்கீழ் வலி காமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவில் அராலி வடக்கு மயிலியற்புலம் கிராமம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை யின் 'கமி அருண' திட்டத்தின் கீழ் மக் களின் பங்களிப்புடன் சுமார் 50 லட்சம் ரூபா செலவில் இக்கிராமம் அபிவி ருத்தி செய்யப்படவுள்ளது.

மயிலியற்புலம் கிராமத்தின் தேவை மதிப்பீடு ஒன்று அண்மையில் பிரதேச செயலகத் திட்டமிடல் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டு வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. (175)

# இனவன்முறை வெடிக்காமல் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## அரசை வற்றுபுறுத்துகிறார் மனித உரிமைகள் ஆணையாளர்

கொழும்பு,ஜூன்19

நாட்டில் இனவன்முறைகள் வெடிக் காமல் இருப்பதற்கு முனைப்பான ஏற் பாடுகள் நடைமுறையில் இருக்க வேண்டும். சகல இன பொதுமக்களின் உயிர்கள் மற்றும் சொத்துக்கள் காப்பற் றப்பட வேண்டும்.

இவ்வாறு இலங்கை அரசை வற்று புறுத்திக்கேட்டுக்கொள்ளும் அறிக்கை யொன்றை ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அம்மையார் விடுத் துள்ளார்.

கெப்பிட்டிக்கொல்லாவ பஸ் பய ணிகள் மீதான தாக்குதலை மனித இனத் தின் அடிப்படை உரிமைக் கோட்பாடுகள் அனைத்தையுமே மீறும் மிகமோசமான செயலாகும் என்று தெரிவித்துள்ள ஆர்பர் அம்மையார் இந்தச் சம்பவம் தொடர்பாக உடனடியாக அரசு விசாரணையை நடத்தி சம்பந்தப்பட்டவர்களை நீதியின் முன் நிறுத்துவது மட்டுமன்றி சர்வதேச சமூ கத்தின் முழுக் கண்டனத்துக்குள்ளாக் கப்படவேண்டும் என்று குறிப்பிட்டுள் ளார். அவர் மேலும் தெரிவித்திருப்ப தாவது:-

மே 13 ஆம் திகதி யாழ்ப்பாணத் தில் 13 தமிழர்கள், சிறுவர்கள் உட்பட கொல்லப்பட்டார்கள் . மே 29 ஆம் திகதி வெலிகந்தையில் 12 சிங்களத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டார் கள். ஜூன் 9 ஆம் திகதி இரண்டு சிறு வர்கள் உட்பட 4பேர் கொண்ட தமிழ்க்குடும்பம் மன்னாரில் மிருகத் தனதாக கொல்லப்பட்டார்கள். இது வரை பொதுமக்கள் மீதான இத்தாக்கு தல்கள் தொடர்பான விசாரணைகளில் எதுவித பயனும் ஏற்படவில்லை.

-இவ்வாறு அவர் தனது அறிக்கை யில் தெரிவித்துள்ளார். (ப)

# கிராமசேவையாளர்களுக்கு கணனிப் பயிற்சி நெறி

வலி.வடக்கு,ஜூன்19

யாழ். மாவட்டத்தில் பணிபுரியும் கிராம அலுவலர்களுக்கான ஐந்து நாள் கணனிப் பயிற்சி வகுப்புகள் ஆரம்ப மாகியுள்ளன.

கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப் பட்ட இப்பயிற்சிநெறி வடக்கு - கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித் திணைக்களத்தின் அனுசர ணையுடன் நடத்தப்பட்டுவருகின்றது. (86)

# அநுராதபுரம் குண்டுத் தாக்குதலை யாழ். ஆயரும் கண்டிக்கிறார்

யாழ்ப்பாணம், ஜூன்19

கெப்பிட்டிக்கொல்லாவ தாக்குதலைக் கண்டித்து யாழ். ஆயர்மேதகு தோமஸ்சவுந் தரநாயகம் ஜனாதிபதிக்கு கண்டன அறிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 15 ஆம் திகதி கெப்பிட் டிக்கொல்லாவையில் நடைபெற்ற கோரச் சம்பவத்தால் அதிர்ச்சியும் வேத னையும் அடைந்துள்ளோம்.

கெப்பிட்டிக்கொல்லாவ நோக்கி சென்றுகொண்டிருந்த பயணிகள் பஸ் இரு கிளைமோர் தாக்குதல்களினால் தகர்கப் பட்டுள்ளது. சிறுவர் உட்பட 63 பேர் கொல்லப்பட்டும் 70 இற்கு மேற் பட்டோர் படுகாயப்பட்டும் உள்ளனர்.

இத்தாக்குதலை நாம் மிகவும் வன் மையாகக் கண்டிக்கிறோம். காயப்பட் டவர்களோடும் வேதனை அனுபவிப் பவர்களோடும் எமது அனுதாபங் களைத் தெரிவித்து இணைந்து கொள் கின்றோம். இந்தக் கொடூரச் செயலை புரிந்தவர்கள் சமாதானத்தின்வழிக்குதி ரும்ப வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறோம் - என்றுள்ளது.

## நாளை

ஆனி- 06
செவ்வாய்க்கிழமை
20.06.2006
திதி : நவமி
காலை : 6.07
நட்சத்திரம் :ரேவதி
மாலை : 06.52
சுபநேரம் : 10.24-11.54
ராகுகாலம் : 02.54-04.24

## உதயவாக்கு

குற்றங்களையும் தவறுகளையும் மறைக்க முயல்வது புண்ணுக்கு புனுகு தடவுவது போலாம்.

- சோக்ரட்டீஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

3 Sri தொடர் இலக்க மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 101, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (51309)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான பகிரா புறொயிலர் குஞ்சுகள் 14.06.2006 மாலை விநியோகிக்கப்படும். தொடர்பு: றாஜீவ் - ஆனைக்கோட்டைச் சந்தி, ரவி - சாவகச்சேரி, தாரகை - பருத்தித் துறை, றாஜீ ஸ்ரோர்ஸ் - பிரதான வீதி, நெல்லியடி, சுன்னாகம், உடுவில், கோப்பாய், கோண்டாவில், வட்டுக்கோட்டை, தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் ஆகிய கால்நடைச் சங்கங்களிலும் பெற்றுக்கொள்ளலாம். **T.P.:** 222 2867, 222 3529 (51099)

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட **Original Prima Broiler** குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 19.06.2006 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும், முருகன் - சாவகச்சேரி - சந்நிதி பாம் தொண்டைமானாறு - நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர். (சி-49614)

## மணமகன் தேவை

யாழ். இந்துகௌரவ குடும்பம், வலிகாமம், 1979இல் பிறந்த, அவிட்டம், 4ஆம் பாதம், 8இல் சூரியன், செவ்., புதன் உள்ள **B.Sc.** பட்டதாரி ஆசிரியைக்கு ஏற்ற மணமகன்தேவை. தொடர்பு இல.: 2895, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (51278)

## சிறுகதை எழுதுவது எப்படி

1. நாடகம் எழுதுவது எப்படி? 2. வானொலி நாடகம் எழுதுவது எப்படி? நூல்களை எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. 10 சிறுகதைகளும் 13 கட்டுரைகளும். இதைப் படித்தால் சிறுகதை எழுதலாம். ரூபா 150.00 (51277)

# சமய சந்நிதிகளில்

தென்மராட்சி கிழக்கு, ஜூன்19

வரணி சுட்டிபுரம் அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 24ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (122)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்19

தெல்லிப்பழை கிழக்கு குருநாத சுவாமி ஆலய கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு அலங்கார உற்சவம் கடந்த 15ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் வியாழக்கிழமை திருக்கார்த்திகை உற்சவம், சண்முகார்ச்சனை, தண்டிகைத் திருவிழா என்பன இடம்பெறும். 26ஆம் திகதி திங்கட்கிழமை காலை தீர்த்தோற்சவம் இடம்பெற்று திருவிழா நிறைவடையும். (175)

* * *

வலி.மேற்கு, ஜூன்19

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயப் பெருந்திருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு நடேசர் அபிசேகமும் தொடர்ந்து தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (175)

* * *

வலிமேற்கு,ஜூன்19

வட்டுக்கோட்டை வீரபத்திர சிவன் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் இரண்டாம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. நாட்டில் உள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக இரவுத் திருவிழாக்கள் இரவு 8 மணியுடன் நிறைவடையும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (175)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்19

சித்தன்கேணி தனுவோடைப்பதி சிவகாமி சமேத சிவசிதம்பரேஸ்வரர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (175)

## வேள்வி

கீரிமலை கவுணாவத்தை வைரவர் ஆலய வருடாந்த வேள்வி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் 500இற்கும் மேற்பட்ட ஆடுகளும் 100 இற்கும் மேற்பட்ட கோழிகளும் பலியிடப்பட்டன.

## மணமகன் தேவை

யாழ். இந்துகௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980ஆம் ஆண்டு பிறந்த பொறியியலாளர் மணமகளுக்குப் பெற்றோர் தகுந்த மணமகனை எதிர்பார்க்கின்றனர். ஜாதகக் குறிப்பு, கல்வி,தொழில் மற்றும் குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

**விள. இல. 2896**

(51335) (14-11-24) **மே.பா. உதயன்.**

## புளியங்கூடல் மகாமாரி இந்துவாலிப சங்க அன்னதானம்

கடந்த வெள்ளிக்கிழமை புளியங்கூடல் மகாமாரி அம்பாளின் வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி நடைபெறுகிறது. இடம்பெயர்ந்து அம்பிகையைத் தொழவரும் அடியார்களின் வசதிக்கேற்ப புளியங்கூடல் இந்துவாலிப சங்கத்தினரால் வருடந்தோறும் நடத்தப்படும் அன்னதானம் இவ் உற்சவகாலங்களில் தொடர்ந்தும் நடத்தப்படும் என்பதை அம்பிகை பக்தர்களுக்கு அறியத்தருகின்றோம்.

*இந்துவாலிப சங்கம்,*
*புளியங்கூடல்.* (51346) (33-14-11-24) **- தலைவர்.**

## கண்ணீர் அஞ்சலி

15.06.2006 அன்று கொழும்பில் காலமாகிய, எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர் **திரு.க.செல்வரட்ணம்** அவர்களின் அன்புத் தந்தை அமரர் **விநாயகம் கந்தசாமி** அவர்களுக்குக் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*கல்லூரிச் சமூகம்,*
(சி/49745) (24-11-14) *யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி.*

## கண்ணீர் அஞ்சலி

16.06.2006 அன்று காலமாகிய, எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியை **திருமதி மகேந்திரராணி இளங்கோ** அவர்களின் அன்புத் தந்தை அமரர் **தம்பையா சுப்பிரமணியம்** அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*கல்லூரிச் சமூகம்,*
(சி/49744) (24-11-14) *யா/விக்னேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி.*

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய இளைப்பாறிய அதிபர் **மரியாம்பிள்ளை நீக்கிலாப்பிள்ளை** அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் மற்றும் உறவினர், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காகவும் செபிக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர்கள்,
**யா/புனித சாள்ஸ் ம.வி.** (51339) (26.11.14.24)


Shanida Vasanawa

திருப்புப்பு இல. **1719**

17.06.2006 ஆம் திகதி சனிக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

**வெற்றி எண்கள்** சுப்பர் எண்

**05 11 31 61 (01)**

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 301141541 இலிருந்து 301156781

**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 1,32,24,450/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 1,32,24,450/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 24 | 5,000/- | 1,20,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 410 | 1,000/- | 4,10,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,321 | 500/- | 6,60,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 19,628 | 40/- | 7,85,120/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 18,610 | 20/- | 3,72,200/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 2,79,281 | 10/- | 27,92,810/- |
| **மொத்தம்** | | | **61,40,630/-** |
| தங்க நகைகள், தையல் இயந்திரம், பைசிக்கிள் | 5 | 1,20,000/- | 6,00,000/- |
| **வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை** | **3,19,280** | | **67,40,630/-** |

தொடர் இல. 201238109 க்கு மேற்பட்ட [illegible] டிக்கெட்டுக்கள் 2006 ஜூன் மாதம் 21 ஆம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

**இந்த புதன்கிழமை**
**சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 1,39,70,450/-**

[illegible]

| | |
|---|---|
| கேகாலை | 301155807-8-35 |
| மட்டக்களப்பு | [illegible] |
| புத்தளம் | 301151458-0-68 |
| மொனராகலை | [illegible] |
| அனுராதபுரம் | 301147332-4-27 |

வளமான வாழ்விற்கு

இல. 33, [illegible]
கொள்ளுப்பிட்டி கொழும்பு-03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

திவ்யா



19 ★ 06 ★ 2006

HAPPY BIRTHDAY

**திரு. திருமதி சிவறூபன் - சுரேகா** *தம்பதியினரின் செல்வப் புதல்வி* **சி.திவ்யா**
*தனது முதலாவது பிறந்தநாளை இன்று (19.06.2006) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்.*
*இவரை அப்பப்பா, அப்பம்மா, அத்தை (ஜேர்மனி), பெரியப்பா (ஐங்கரன் புடைவை மாளிகை), அத்தைமார் ஆகியோர் திவ்யாவைப் பல்கலையும் பெற்று சகல சௌபாக்கியங்களுடனும் பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகிறார்கள்.*

**வன்னியசிங்கம் வீதி,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.** **அப்பப்பா.** (51337) (24-11-14)


STUDY IN MALAYSIA & SINGAPORE

மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் உயர் கல்வியை உடன் தொடர விரும்புகின்றீர்களா? எதிர்காலத்தினை நன்கு திட்டமிட்டு மேற்கல்வியினை பயில விரும்பும் மாணவர்களுக்கு அரியதோர் சந்தர்ப்பம்.

**Diploma in Hospitality Management**

6 மாதகால பாடநெறிப் பூர்த்தியைத் தொடர்ந்து ஏனைய 6 மாத காலமும் சம்பளத்துடன் தொழிற்பயிற்சி வழங்கப்படும்.

- **100% வீசா உத்தரவாதம்**
- **அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்**
- **குறைந்த தகைமை** (O/L)

**Diploma, Degree, Master Degree in**

Business Management, Multi Media, Account and Finance etc...

இதுவரை காலமும் 100இற்கும் மேற்பட்ட மாணவர்களை (IELTS) பரீட்சைக்கு வெற்றிகரமாகத் தயார் செய்து அவர்களின் வெற்றிப் பாதையில்...

மேலதிக விவரங்களுக்கு: (சி/49743) (26.11.24.14)

**Prince Academy**
**535, 2/2 Wellawatta, colombo-06 Tel: 071 4023433**


## கண்ணீர் அஞ்சலி



*எமது கல்லூரி முன்னாள் அதிபர்* ***சோமு விஸ்வலிங்கம்*** *அவர்களின் ஏகமைந்தனும் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் செயற்குழு உறுப்பினருமான*

**விஸ்வலிங்கம் பரணீதரன்**

அகாலமரணமான செய்திகேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம். அவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கல்லூரிச் சமூகம்,** (51320) (26.14.24.11)
**யா/அத்தியார் இந்துக் கல்லூரி, நீர்வேலி.**

## மரண அறிவித்தல்

### *செல்லையா செல்லம்மா*

எழுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது வவுனியாவில் வசித்துவந்தவருமான செல்லையா செல்லம்மா 18.06.2006 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் அன்னலக்சுமி, கிருஷ்ணகுமார், விஜயகுமார் (தபால் உத்தியோகத்தர், எழுத்துமட்டுவாள்), ஜெயக்குமார் (சுவிஸ்) ஆகியோரின் தாயும் ஸ்ரீஸ்கந்தராஜா (ராஜன் கடை, தாண்டிக்குளம்), ஜெயமலர், தேவகி (சுவிஸ்), காலஞ்சென்ற வரதலக்சுமி ஆகியோரின் மாமியும் சுதர்சன் (பிராந்திய முகாமையாளர், வரையறுக்கப்பட்ட கூட்டுறவுக் காப்புறுதிக் கம்பனி), றஞ்சிதமலர் (ஆசிரியை), ஸ்ரீமிதுளா, துளசிகா, சுஜேந்திரன் (சுவிஸ்), சுமுதினி (பிரான்ஸ்), துசிந்தா, கௌசிகன், சங்கீதன் ஆகியோரின் பேர்த்தியும் ருத்திரகாயன், சோபிகாயன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யாவும் இன்று (19.06.2006) திங்கட்கிழமை நடைபெற்று, பூதவுடல் வவுனியாவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தாண்டிக்குளம்,*
*வவுனியா.*
(51337) (24.11.14)

தகவல்:
**குடும்பத்தினர்**
*(மகன் - செ.விஜயகுமார்).*

# இலங்கையில் போர்மூண்டால் இந்தியா உதவக் கூடாது

## உதவினால் அது தமிழர் மீதான தாக்குதலாகவே அமையும் என்கிறார் வைகோ

மதுரை,ஜூன்19

இலங்கையில் போர் மூண்டால் ஒரு துரும்பைக் கூட இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா வழங்கக்கூடாது என்று மதுரையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழர் பகுதியில் உண்மையான நிலையைக் கண்டறிந்து பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஆறுதல் கூறவும் இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவை உடனே அனுப்பக்கோரியும் சிறிலங்கா நாடாளுமன்ற தமிழ் உறுப்பினர்களின் குழு இந்தியப் பிரதமரைச் சந்தித்துப் பேச உடனடியாக நடவடிக்கை எடுக்கக் கோரியும் தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில் மதுரை தமுக்கம் மைதானம் அருகே தபால் தந்தி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தலைமை தாங்கி பேசியதாவது:-

இலங்கையில் அநுராதபுரம் அருகே பேருந்து கண்ணிவெடியில் சிக்கி 64 உயிர்கள் பலியாகி இருக்கின்றன. குழந்தைகளும, பெண்களும் கூட இதில் பலியாகி இருக்கிறார்கள். இந்த சம்பவத்தைக் கண்டிக்கிற அதே சமயத்தில், இந்த சம்பவத்துக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துவிட்டது. ஆனால், இலங்கை இராணுவமோ, விடுதலைப் புலிகள்தான் காரணம் என்று அறிவித்துவிட்டு தமிழர் பகுதியில் கோர குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தி வருகிறது. யார் செய்தது? என்று கண்டுபிடித்துவிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டியதுதான் இலங்கை அரசின் பொறுப்பு. ஆனால் தாக்குதல் நடத்தப்படுவதற்கு பின்னணி என்ன?

ஜெனீவாவில் நடந்த பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் செல்லவில்லை. இலங்கை அரசு போர்நிறுத்தத்தை அறிவிக்கவில்லை. ஆனால் போர்நிறுத்தத்தை அறிவித்தவர்கள் விடுதலைப் புலிகள்தான். போர்முனையில் வெற்றியைச் சந்தித்த பிறகுதான் விடுதலைப் புலிகள் போர்நிறுத்தத்தை அறிவித்தனர்.

போர்நிறுத்தம் அறிவித்துவிட்டு தாய்லாந்தில் பேச்சுவார்த்தை தொடங்கி அது முறையாக நடைபெற்றது. அதை முறியடிக்க இலங்கை அதிபர் சந்திரிகா முயற்சித்தார். அதற்குப் பிறகு சர்வதேச நாடுகள் சார்பில் வந்த கண்காணிப்புக் குழு தமிழர் பகுதியில் போர் செய்வது விதிமுறைகளை மீறிய செயல் என்று சொல்லி உள்ளது.

இலங்கையில் நடப்பது உள்நாட்டு பிரச்சினை அல்ல. போர் மூளக்கூடும் என்ற அபாய கட்டம் இப்போது இருக்கிறது.

இலங்கையில் போர் மூண்டால் எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்திய அரசு இலங்கை அரசுக்கு ஒரு துரும்பைக் கூட தூக்கிப் போடக்கூடாது. இலங்கைக்கு உதவி செய்தால் அது ஒட்டுமொத்த தமிழர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலாகவே கருதப்படும். தடைகளால் சுதந்திர தாகத்தை தடுத்துவிட முடியாது.



இப்போதைய இலங்கைப் பிரச்சினையில் தமிழ் மக்களின் உணர்ச்சி நீறு பூத்த நெருப்பாக இருக்கிறது. எப்போதுமே இலங்கைத் தமிழர்கள் பக்கமே தமிழ்நாட்டு மக்கள் இருப்பார்கள் - என்றார் வைகோ.

மதுரை ஆர்ப்பாட்டத்தில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் தியாகு, சேலம் ஆர்ப்பாட்டத்தில் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி, கவிஞா அறிவுமதி, கோவை ஆர்ப்பாட்டத்தில் பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கோவை. ராமகிருட்டிணன், தஞ்சையில் தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சி செயலாளர் பெ.மணியரசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மண்டபம் பகுதியில் தரை ஒதுங்கிய கடல்பசு

ராமேஸ்வரம்,ஜூன்19

மண்டபம் கடல் பகுதியில் கடல்பசு இறந்த நிலையில் கரை ஒதுங்கியது. மண்டபம் வேதாளை தெற்கு கடற்கரையில் மன்னார் வளைகுடா கடல் பகுதியில் வாழும் அரிய வகை பாலூட்டி இனமான கடல்பசு இறந்த நிலையில் கரை ஒதுங்கியது.

மீனவர்களால் 'ஆவுலியா' என்றழைக்கப்படும் இக் கடல்பசு கப்பல் மற்றும் படகில் அடிபட்டு இறந்திருக்கலாம் என்று வனத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். அடிபட்டு இறந்த நிலையில் ஒதுங்கிய கடல்பசு11 அடி நீளம், 500 கிலோ எடை கொண்டதாக இருந்தது.

## பாகிஸ்தான் சிறைகளில் 548 இந்தியர்கள் தடுப்பு

இஸ்லாமாபாத்,ஜூன்19

பாகிஸ்தானில் பல்வேறு சிறைகளில் 432 மீனவர்கள் உட்பட 548 இந்தியர்கள் சிறைப்பட்டுள்ளார்கள். இதை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சக அதிகாரி, இஸ்லாமாபாத்தில் கடந்த சனிக்கிழமை தெரிவித்தார்.

இந்தியச் சிறைகளில் 30 மீனவர்கள் உட்பட 493 பாகிஸ்தானியர் உள்ளனர். இரு நாடுகளும் தங்களது சிறைகளில் வாடுவோரின் பட்டியலை பகிர்ந்துகொள்ளும் ஒப்பந்தம் ஒன்றும் எட்டப்பட்டுள்ளது.

# ஈராக் மீதான அமெரிக்காவின் போர் நகைப்புக்குரிய தவறாகிவிட்டது

## புஷ் அரசைக் கிண்டல் செய்கிறது ஜனநாயகக் கட்சி

வாஷிங்டன்,ஜூன்19

ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தது நகைப்புக்குரிய தவறாகிவிட்டது என புஷ் அரசை ஜனநாயகக் கட்சி கிண்டல் செய்துள்ளது.

ஈராக் மீது போர் தொடுத்ததை எதிர்த்து அமெரிக்க மக்கள் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அங்கு உயிரிழந்த அமெரிக்க வீரர்களின் பெற்றோர் புஷ் அரசைக் கடுமையாகக் குறைகூறி வருகின்றனர். இந்நிலையில் அங்கு அமெரிக்கப் படைகள் தொடர்ந்திருப்பதற்கு அனுமதி கோரும் தீர்மானம் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் சபையில் கொண்டுவரப்பட்டது.

நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள சூழ்நிலையில் ஜனநாயகக் கட்சியின் நிலையை அறிவதற்காகவே இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படுகிறது.

தீர்மானத்தை ஆதரித்து 256 வாக்குகளும் எதிர்த்து 153 வாக்குகளும் கிடைத்தன. 'படைகள் வாபஸ் பெறுவது முக்கியமல்ல. வெற்றி ஒன்றே முக்கியம். அமெரிக்கர்களுக்கும் அவர்களது சந்ததியினருக்கும் அதுதான் நல்லது' என குடியரசுக்கட்சியின் அவைத் தலைவர் ஜான் போனர் தெரிவித்தார்.

ஆனால், ஜனநாயகக் கட்சியின் தலைவர் நான்ஸி பெலோஸி படைகளை வாபஸ் பெற்று, உண்மைகளை உணரவேண்டிய சமயம் இது. புஷ் ஈராக் மீது போர் தொடுத்தது நகைப்புக்குரிய தவறாகிவிட்டது எனக் கிண்டலாகக் கூறினார்.




# இந்து கோயில் இருந்த இடத்தில் வேறு கட்டடம் கட்ட நீதிமன்று தடை

இஸ்லாமாபாத்,ஜூன்19

பாகிஸ்தானில் சமீபத்தில் இடிக்கப்பட்ட இந்து கோயில் இருந்த இடத்தில் வணிக வளாகம் கட்டுவதற்கு லாகூர் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது என அந்நாட்டு சிறுபான்மையினர் நல கவுன்சில் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தானின் 'தி போஸ்ட்' நாளிதழில் வெளியான செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:-

கடந்த சில் நாள்களுக்கு முன் லாகூரில் இருந்த ஒரே இந்து கோயிலான கிருஷ்ணா மந்திர் இடிக்கப்பட்டது. அந்த இடத்தில் வணிக வளாகம் கட்டுவதற்காக நகை வியாபாரி ஒருவருக்கு, வெளியேற்றப்பட்டோர் சொத்துக்களை பாதுகாக்கும் அறக்கட்டளை அனுமதி அளித்ததையடுத்து கோயில் இடிக்கப்பட்டது. தற்போது இதை எதிர்த்து பாகிஸ்தான் சிறுபான்மையினர் நல கவுன்சிலின் பொதுச் செயலர் ஓம் பிரகாஷ் நாராயண், லாகூர் மேல் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில் கோயிலை இடிக்க அனுமதி அளித்த அறக்கட்டளை தலைவர் மற்றும் இதில் பொலீஸார் வழக்கு பதிவு செய்ய நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், கோயிலை அதே இடத்தில் பழைய நிலையில் மீண்டும் அமைக்க உத்தரவிட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது இது குறித்து விசாரணை நடத்திய லாகூர் மேல் நீதிமன்ற நீதிபதி முகமது அக்தர் ஷப்பீர், கோயில் இருந்த இடத்தில் கட்டடம் கட்டும் பணியைத் தடுத்து நிறுத்தும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். கட்டடம் கட்டுவதற்கு அனுமதி அளித்த அறக்கட்டளைக்கு இது குறித்து பதில் தரவேண்டும் எனக் கூறியுள்ளார்.

இந்நிலையில், லாகூரில் கோவில் இடிக்கப்பட்டதாக கூறப்படும் தகவல்களை பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் மறுத்துள்ளது.

மேலும், கோவில் இருந்த இடத்தில் கட்டடம் கட்டும் பணி எதுவும் நடைபெறவில்லை என்றும் கூறியுள்ளது - இவ்வாறு 'தி போஸ்ட்' நாளிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சீன வெடிகுண்டு ஆலையில் விபத்து 14 தொழிலாளர்கள் பரிதாப மரணம்

பெய்ஜிங், ஜூன்19

சீனாவிலுள்ள வெடிகுண்டு தயாரிக்கும் ஆலையில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர். 30 பேர் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அன்ஹுய் மாகாணத்தில், கிணறு தோண்டுவது போன்ற வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் வெடிகுண்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது. இதில் கடந்த வெள்ளிக்கிழமை பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. இதனால் இரண்டு மாடிகளைக்கொண்ட அந்த ஆலை தரைமட்டமானது.

விபத்து நடந்தபோது, ஆலையில் எத்தனை பேர் பணிபுரிந்தனர் என்பது தெரியவரவில்லை. விபத்து நடந்த இடத்தில் சிதறிக் கிடக்கும் வெடிபொருள்கள் மீண்டும் வெடிக்கக் கூடும் என்ற அச்சம் நிலவுகிறது. இதனால், மீட்புப் பணிகள் கடினமாக உள்ளதாக சீன அதிகாரிகள் தெரிவித்தனர்.

## செச்சினிய பிரிவினைவாதத் தலைவர் பொலீஸ் மோதலில் கொல்லப்பட்டார்

மொஸ்கோ,ஜூன்19

செச்சினிய பிரிவினைவாதத் தலைவரான அப்துல் காலிம் சைதுல்லாயெவ் பொலீஸ் நடவடிக்கையொன்றின்போது கொல்லப்பட்டார் என ரஷ்ய மற்றும் மாஸ்கோ சார்பு செச்சினிய வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

சைதுல்லாயெவ் தனது சொந்த ஊரான ஆர்குனில் ஏற்பட்ட மோதலில் கொல்லப்பட்டார். அவருடன் ரஷ்ய முகவர் ஒருவரும் பொலீஸ் ஒருவரும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. போராளிகள் தரப்பிலிருந்து உடனடியாகக் கருத்து எதுவும் வெளியிடப்படவில்லை.

இது பிரிவினைவாதிகளுக்கு ஏற்பட்ட ஒரு பெரும் அடி என்று செச்சினிய பிரதம மந்திரி ரம்பென் கடிரோல் வரவேற்றுள்ளார்.

பயங்கரவாதிகள் பெரும்பாலும் தலையறுக்கப்பட்டுவிட்டார்கள். இதிலிருந்து அவர்கள் மீளவே போவதில்லை என்றும் அவர் கூறினார்.

சைதுல்லாயேவின் உடல் அடையாளம் காணப்பட்டுள்ளது. அவரை அறிந்தவர்கள் அடையாளம் கண்டு தெரிவித்துள்ளார்கள். அதில் சந்தேகமே இல்லை. பொலீஸ் அதிகாரி அலீன் தஹிரியோ கூறினார். (ப)

## சிவப்பு ரோஜா மலருக்கு பிளேயரின் மனைவி பெயர்

லண்டன்,ஜூன்19

பிரிட்டனில் ஒருவகை சிவப்பு ரோஜா மலருக்கு அந்நாட்டுப் பிரதமரின் மனைவியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயரின் மனைவி செர்ரி பிளேயர். இவர் பிரபல மனித உரிமை வழக்கறிஞர்.

பெர்மிங்காமில் நடந்த தோட்டக்கலைக் கண்காட்சியில் இடம்பெற்றிருந்த மணம்மிக்க அழகிய சிவப்புநிற ரோஜா மலருக்கு செர்ரி என்று பெயர்சூட்டப்பட்டது.

தன்பெயர் சூட்டப்பட்ட ரோஜா மலரின் நிறத்தைத் தாமே தேர்ந்தெடுத்ததாக கடந்த வெள்ளிக்கிழமை கண்காட்சியில் கலந்துகொண்ட செர்ரி பிளேயர் கூறினார்.

அவரது கணவர் ரொனி பிளேயரின் தொழிலாளர் கட்சியின் சின்னம் சிவப்புரோஜா என்பது குறிப்பிடத்தக்கது.

செர்ரி ரோஜா விற்பனை மூலம் கிடைக்கும் பணம் செர்ரி பிளேயர் பங்குவகிக்கும் அகதிகள் மறுவாழ்வுப் பணிக்கு அளிக்கப்படும்.

உங்கள் விமானப் பயணத்திற்கு
Aero Lanka
In Domestic Operation
Head Office
No.500, Galle Rd.,
Colombo-6, T:2505 632/3
Fax: 2500 626
Trinco Office
No.47, Kandy Rd.,
Trincomalee. T: 026 222 1519
Fax: 026 2221519
Jaffna Office:
No.86, Point Pedro Rd.
Jaffna. T:021 222 6212
Fax: 021 222 5600
Branch:
No.14, New Market Bldg.,
Chavakachcheri.T: 021 2227979
Fax: 021 2227979
New way of Flying



யாழ் - கொழும்பு விமான சேவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

ஏழாலை மேற்கு ஏழாலையைச் சேர்ந்த 'நடராசா தங்கரத்தினம்' ஆகிய நான் 16-06-2006 முதல் எனது பெயரை 'நடராசா திவ்யா' என மாற்றிக் கொள்கிறேன் என்பதனையும் இனிமேல் சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என்பதையும் இத்தால் அறியத் தருகின்றேன்.

ஏழாலை மேற்கு. (சி/49732) (26.14.11) -நடராசா திவ்யா.

## மரண அறிவித்தல்

### மரியாம்பிள்ளை நீக்கிலாப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர், புனித சாள்ஸ் ம.வி. யாழ்.)



ஒட்டகப்புலத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை நீக்கிலாப்பிள்ளை அவர்கள் 16.06.2006வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானம்மா நீக்கிலாப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை (ஆசிரியர்), எட்வேட் (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான திருமதி சூ.இரத்தினம், திருமதி எலிசம்மா செபமாலை மற்றும் திருமதி எ.மேரியம்மா (இளைப்பாறிய ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் றொபேட் அருமைநாயகம் (ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி), கிளெமென்ற் யோகநாயகம் (U.K.), திருமதி யசிந்தா கலிஸ்ரஸ் (ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி), செல்வி பற்றிமா நீக்கிலாப்பிள்ளை (S.C.F. Colombo), திருமதி பற்றீசியா கிளெட்வின் (Canada), திருமதி பெனிற்றா கோணேஸ்வரன் (UNHCR) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி மரியபிறிற்றா அருமைநாயகம் (ஆசிரியை, புனித பத்திரிசியார் கல்லூரி), திருமதி பிறிசில் டாகலா யோகநாயகம் (U.K.), கலிஸ்ரஸ் யோசவ் (UNDSS, Jaffna), கிளெட்வின் (Canada), கோணேஸ்வரன் (UNHCR) ஆகியோரின் அன்பு மாமனும் மைக்கல், நீக்கலா (U.K.), ஜெறிபிறண்டன் (SLITAD), காலஞ்சென்ற ஆன் சிந்துஜா மற்றும் ரைசன், ஷேளி (Canada) டாரண்யா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (19.06.2006) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, திருப்பலியின்பின் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

72ஏ, றக்கா வீதி,
யாழ்ப்பாணம். (51300)

தகவல்:
பிள்ளைகள்.


A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான குறுகிய கால விசேட கற்கைநெறிகள்

**LINUX @ AIMS**

GNU/LINUX Fundamental
- Installation
- Open Source Introduction
- Shell Scripting
- Command Line Operation
- Networking

15 நாட்களில் புதியதோர் O/S இல் தேர்ச்சி பெற நீங்கள் தயாரா? இணையுங்கள் AIMS உடன்.

**Dynamic Web Page Development**
- PHP - MySQL - Apache

**Programming @ AIMS**

Programming Language இல் உங்களுக்கு மேலதிக பயிற்சி தேவையா? AIMS உடன் இணைந்து குறுகிய காலத்தில் தேர்ச்சி பெறலாம்.
1. VB.Net 2. ASP.Net 3. JAVA

**DBMS @ AIMS**

Data Base Management Systems Using Oracle 9i
- Introduction to Data Base
- Oracle - Table Creation & Sub Query
- PLSQL - Procedure,Function & Triggers
- Project work & Assignment

ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ரீதியிலான கவனிப்புடன் 15 நாட்களில் DBMSஇல் தேர்ச்சி பெற முடியும்.

**SQL Server Administration**
- SQL - Views - Backup
- Stored Procedure - Triggers

Batch -I 18.06.2006 Starts on காலை 9.00 மணி Batch -II 21.06.2006

மேலதிக விபரங்களுக்கு,
இயக்குனர்,
#118 பலாலிவீதி, திருநெல்வேலி
(தபால்பெட்டி சந்தி அருகில்)

AIMS Your Training Partner
Center for FOSS & LAMP


## பொதுக்கிணறு புனரமைப்பு

வலி.மேற்கு, ஜூன்19

வலி.மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் சேதமடைந்த பொதுக்குடிதண்ணீர்க் கிணறுகள் திருத்தியமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை பதில் பிரதேச செயலர் திருமதி பாபுதேவந்தினி மேற்கொண்டுள்ளார்.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பின்தங்கிய கிராமங்களிலுள்ள வயல் நிலங்களிலுள்ள பொதுக்கிணறுகளும் பொதுக்குடிதண்ணீர்க் கிணறுகளும் 'யுனிசெப்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் திருத்தியமைக்கப்படவுள்ளன.

இதற்கான ஆரம்பக்கட்ட நடவடிக்கைகளை பிரதேச செயலக திட்டமிடல் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர். (175)

## அடகுநகை மீட்பு தீவிரம்

வலி.மேற்கு.ஜூன் 19

குடாநாட்டிலுள்ள வங்கிகளில் நகைகளை அடகு வைத்து பணம் பெற்றவர்கள் நகைகளை மீட்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக செயற்படுவதை வங்கிகளில் காணக்கூடியதாக இருக்கின்றது.

குடாநாட்டிலுள்ள இலங்கை வங்கி, மக்கள் வங்கி கிளைகளில் கடந்த வாரம் பெரும் எண்ணிக்கையில் மக்கள் அடகு வைத்த நகைகளை மீட்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். இதனால் வங்கிக்கிளைகளில் தமது அன்றாட சேவையினை பெற்றுக்கொள்வதற்கு வாடிக்கையாளர்கள் அதிக நேரத்தினை செலவிட வேண்டியிருந்தது. (175)

## மகிழ்களம் கண்காட்சி

யாழ்ப்பாணம் ஜூன்19

செயல்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் சிறுவர் ஆக்கத்திறனை வெளிப்படுத்தும் மகிழ்களம் கண்காட்சி இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (202)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**சிவகுருநாதன் பாலகிருஷ்ணன்**
(பொறியியலாளர்)

இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தில் 36 வருடங்கள் அரும்பணியாற்றி 18-06-2006 முதல் அகவை அறுபதில் ஓய்வுபெற்ற

**சிவகுருநாதன் பாலகிருஷ்ணன்**

அவர்களை நாம் மனமுவந்து பாராட்டுவதோடு, அவர் தமது ஓய்வு காலத்திலும் சகல வளங்களும் பெற்று குடும்பத்தினருடன் ஆரோக்கியமாகவும் நீண்ட ஆயுளுடனும் வாழ இறை ஆசிவேண்டி வாழ்த்துகின்றோம்.

(51295) (26.14.11)

உத்தியோகத்தர்களும் ஊழியர்களும்
விற்பனைப் பகுதி, விநியோகப் பகுதி,
வேலைக்களப்பகுதி,
இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம், உரும்பிராய்.

## வலி.கிழக்கு வட பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அச்சுவேலி

### இசுசு லொறிக்குப் பொடி அடிப்பதற்கான கூறுவிலைகள்

சங்கத்தின் 26-5725 லொறிக்குப் பின்வரும் வேலைகளுக்கான கூறுவிலைகள், பாவிக்கப்படவுள்ள பொருள்களுக்கும் கூலிக்கும் தனித்தனியாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடம் இருந்து எழுத்து மூலமான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வேலை விவரம்:**

01. பொடியடித்தல் (பெயின்ற் அடித்தல், வாணிஸ் பூசுதல் உட்பட)
02. வயறிங் வேலை செய்தல்
03. ரிங்கர் வேலை செய்தல்
04. எழுத்து வேலை

**நிபந்தனைகள்**

01. சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் பத்திரங்கள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.
02. பாவிக்கப்படவுள்ள பொருள்களின் விவரமும் கூலியும் விவரமாக இடம்பெறவேண்டும்.

விண்ணப்பமுடிவுதிகதி 30.06.2006 ஆகும்.ஒப்பந்த வைப்புப் பணமாக ரூபா 1000.00 (ஓராயிரம்) செலுத்துதல் வேண்டும். விண்ணப்பபடிவம் 10/- செலுத்தி சங்கத்தில் பெறப்படல் வேண்டும்.


*(காரியாலய நேரத்தில் லொறியை பார்வையிடலாம்)*

பொதுமுகாமையாளர்,
வலி. - கிழக்கு (வ.ப) ப.நோ.கூ.ச.,
அச்சுவேலி.

(சி/49729)(11.14.26)

## ஐந்தாண்டு நினைவு தினம்

தோற்றம் 01 - 02 - 1938



மறைவு 19 - 06 - 2001

### அமரர் பொன் சபாபதி

(முன்னாள் கல்விப்பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்டம், வன்னி இணைப்பாளர், வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு)

நதியாய்ப் பயிர் வளர்த்தாய்
நாதியற்றோருக்கெலாம்
நிதியாய் நின்றுதவியதால்
நிழல் மரமாய் நின்றாரேயின்று
பதியாய் பாசமனையாளுக்கும்
பற்றுள்ள புத்திரர்க்கும்
பள்ளிச் சிறார்களிற்கும் கல்வி
நிழலாய்க் கூடம் வைத்தாய்
நின் பெயரைச் சொல்லுதின்று
பழமாம் பணிப்பாளராய்
பண்ணிய தெலாம் வன்னியிலே
அழகாய் பொறித்தனர் பொன்னென
ஆண்டுகள் ஐந்தானாலும்
ஆசைகள் நினைவாமே
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

'துளசி'
ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(50784) (11.14.26)

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்.


IIS COMPUTER COURSES

A/L 2006
பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே !

உங்கள் பரீட்சை முடிவுகள் வெளியாகும் வரையுள்ள பொன்னான காலத்தை
IIS இல் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்

New Batches Start on :
Batch 1 [ Weekday ] : 23.06.2006
Batch 2 [ Weekend ] : 01.07. 2006
Batch 3 [ Weekday ] : 10.07. 2006
Batch 4 [ Weekend ] : 23.07. 2006
at 09.30 A.M.

Diploma Courses
- Diploma in MS Office
- Diploma in Desk Top Publishing
- Diploma in Internet Technology
- Diploma in Hardware Technology
- Diploma in Computer Programming
- Diploma in Eng. Drawing & AutoCAD

சிறப்புக் கட்டணச் சலுகையில் கணனிக் கற்கைநெறிகள்
சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள் !!

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
# 100, Clock Tower Road, Jaffna
Tel : 021 222 2831 Fax : 021 222 6933 Email : iiscc@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில் இரண்டாம் கட்ட வீடமைப்புக்கு கொடுப்பனவு

கிளிநொச்சி,ஜூன்19

வடக்கு-கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாகக் கிளிநொச்சியில் தெரிவுசெய்யப்பட்ட ஆயிரத்து 500 பயனாளிகளுக்கான முதற்கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 49 கிராமங்களில் ஆயிரத்து 500 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

இந்தத் தெரிவுகள் யாவும் வீடமைப்புத் திட்டக் குழுவினரினதும், பிரதேச செயலர் பிரிவு உத்தியோகத்தர்களினதும், கிராமிய புனர்வாழ்வுக் குழுவினரதும் செயற்பாடுகள் மூலம் இடம்பெற்றன.

தற்போது தெரிவுசெய்யப்பட்ட ஆயிரத்து 500 பயனாளிகளுக்குமான முதலாவது கொடுப்பனவு அவர்களின் வங்கிக்கணக்கிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும்-

அவர்கள் அத்திவாரவேலைகளை ஆரம்பித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது கொடுப்பனவில் அத்திவாரம் கட்டி முடிக்கப்பட்டதும் இரண்டாம் கட்டக் கொடுப்பனவு வழங்கப்படும்.

இத்தெரிவில் இடம்பெறாத தகுதியுடைய பயனாளிகள் அடுத்த கட்டத்தில் இணைத்துக்கொள்ளப்படுவர் என்று வடக்கு-கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாணத்திட்ட கிளிநொச்சி மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் வ.சத்தியசீலன் தெரிவித்தார்.

# மகளிரின் சமூகப்பொறுப்பு தொடர்பாக கிளிநொச்சியில் பயிற்சிப்பட்டறை

பரந்தன்,ஜூன்19

மகளிரின் சமூகப்பொறுப்பு, அபிவிருத்தி ஆகியவை குறித்த வலுவூட்டல் பயிற்சி நெறியொன்று அண்மையில் கிளிநொச்சி 'நியாப்' சுற்றுலா விடுதியில் நடத்தப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டச் செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.விமலகுமார் தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி நெறியில் முதன்மைவிருந்தினராகக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகமும், சிறப்பு விருந்தினராக வடக்கு-கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு, சமூக நலன் மகளிர் விவகார அமைச்சின் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் வி.எஸ்.சுவாமிநாதனும் கலந்து கொண்டனர்.

இப்பயிற்சி நெறியில் கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த பெண்கள் கலந்து கொண்டனர். வடக்கு-கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு சமூகநலன் மகளிர் விவகார அமைச்சின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் இப்பயிற்சிநெறி நடத்தப்பட்டது. (352)

# கரைச்சிப் பிரதேசசபைப் பிரிவில் கட்டாக்காலி நாய் அழிக்கும் திட்டம்

வட்டக்கச்சி, ஜூன்19

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ சுகாதார சேவையினரின் ஏற்பாட்டில், கரைச்சிப் பிரதேச சபையினரால் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நீர்வெறுப்பு நோய் தடுப்பு மாதமாக இம்மாதம் பிரகடனப்படுத்தப்பட்டதையடுத்து, தமிழீழ சுகாதார சேவையினரால் தமிழர் தாயகத்தில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அக்கராயன், ஸ்கந்தபுரம், கோணாவில், வன்னேரி, முறிப்பு, ஊற்றுப்புலம், பாரதிபுரம், விவேகானந்தநகர், மலையாளபுரம், ஆனந்தநகர், ஜெயந்திநகர், திருநகர், கனகபுரம், கிளிநொச்சி சந்தைப்பகுதி, உருத்திரபுரம் கூழாவடி, இரத்தினபுரம், கனகாம்பிகைக்குளம், பன்னங்கண்டி, மருதநகர் ஆகிய பகுதிகளில் 400 இற்கும் மேற்பட்ட கட்டாக்காலிநாய்கள் பிடித்து அழிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 200 இற்கும் மேற்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (405)

# 'நிகொட்' திட்டத்தின் கீழ் முல்லையில் 360 வீடுகள்

'நிகொட்' திட்டத்தின் கீழ் முல்லைத்தீவில் மேற்கொள்ளப்பட்டுவரும் வீட்டுத் திட்டத்தில் இரண்டாம் கட்டமாக 360 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் குறித்தசில இடங்களில் கட்டுமானப்பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் கைவேலியில் 50 வீடுகளும் வசந்தநகரில் 100 வீடுகளும் -

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் துணுக்காயில் 15 வீடுகளும் விநாயகபுரத்தில் 50 வீடுகளும் - கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் செங்காட்டுக்கேணி, குமுழமுனை ஆகிய கிராமங்களில் 50 வீடுகளும் -

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் சின்னசாளம்பனில் 40 வீடுகளும் பெரியசாளம்பனில் 35 வீடுகளும் நமணங்குளத்தில் 60 வீடுகளும் அமைப்பதற்கான ஆரம்பக்கட்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன. (353)

# சுகாதாரக் கருத்தூட்டல் நிகழ்வு

பரந்தன், ஜூன்19

கற்சிலைமடு திலீபன் மருத்துவமனையில் சுகாதாரக் கருத்தூட்டல் நிகழ்வும் சுகாதார அபிவிருத்திக் குழுச் சந்திப்பும் அண்மையில் நடத்தப்பட்டன.

அபிவிருத்திக் குழுத்தலைவர் கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பொதுச்சுடரை வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன் ஏற்றிவைக்கத் தேசியக் கொடியை ஒட்டுசுட்டான் பிரதேச பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றினார்.

லெப்.கேணல் திலீபனின் திருவுருவப் படத்திற்கு போராளி சோபிதா ஈகச்சுடர் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து வைத்திய கலாநிதி எழுமதி கரிகாலன் சுகாதாரக் கருத்தூட்டல் நிகழ்வை நடத்தினார். (352)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சதுரங்கப் பயிற்சிப் பட்டறை

வட்டக்கச்சி,ஜூன்19

வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில் நடைபெறவுள்ள சதுரங்கப் போட்டிக்குத் தெரிவாகியுள்ள முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளின் சதுரங்க அணிகளுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்று அண்மையில் கொக்கிளாய் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட வலயக் கல்விப் பணிமனையின் ஏற்பாட்டில் இளையோர் செயற்பாட்டு நிறுவன அனுசரணையுடன் இப் பயிற்சிப்பட்டறை நடத்தப்பட்டது.

முல்லைத்தீவு கல்விவலய உடற்கல்வி உதவிக்கல்விப்பணிப்பாளர் ச.மைக்கல் திலகராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முல்லைத்தீவு கல்வி வலயத் திட்டமிடல் பிரிவு பிரதிக் கல்விப்பணிப்பாளர் ச.நாகரத்தினம், இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த எஸ்.இராகவன், கிளிநொச்சி மாவட்ட சதுரங்க சங்கத்தலைவர் தி.சிவரூபன், முல்லைத்தீவு மாவட்ட சதுரங்க சங்கச் செயலாளர் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

தொடர்ந்து கிளிநொச்சி மாவட்ட சதுரங்க சங்கத் தலைவர் பயிற்சிகளை வழங்கினார்.

இப்பயிற்சியில் முல்லைத்தீவு மாவட்ட மட்டப்போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட பின்வரும் பாடசாலை அணிகளைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

15 வயதுப்பரிவு ஆண்கள் - புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி, செம்மலை ம.வி.

15 வயதுப்பிரிவு பெண்கள் - செம்மலை ம.வி., புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி.

19 வயதுப்பிரிவு ஆண்கள் - புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, செம்மலை ம.வி.

19 வயதுப் பிரிவு பெண்கள் - புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி, வள்ளிபுனம் அ.த.க.பாடசாலை. (405)

# வாகனம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க முல்லை மாவட்ட செயலகத்தில் தனியான அலுவலகம்

புதுக்குடியிருப்பு,ஜூன்19

முல்லைத்தீவில் வாகனம் சம்பந்தமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இதற்கான அலகு ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன பதிவுமாற்றம், வாகன சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் போன்று மக்களுக்கு ஏற்பட்டுவரும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக மக்களின் நலன்கருதி இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபர் க.பார்த்தீபன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கடந்த காலங்களில் வவுனியாவிலுள்ள மாவட்ட செயலகத்திற்குச் சென்றே மக்கள் வாகனம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவந்தனர்.

தற்போது முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இதற்கான அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளமை மக்களுக்கு பெரும் உதவியாக உள்ளதென்று தெரிவிக்கப்பட்டது. (353)

# ஜெயந்திநகர் முன்பள்ளிக்கு தளபாடங்கள் அன்பளிப்பு

வட்டக்கச்சி,ஜூன்19

கிளிநொச்சி ஜெயந்திநகர் முன்பள்ளிக்கு ஒரு தொகுதி தளபாடங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன், முன்பள்ளிக்கல்வி மேம்பாட்டு நிலையத்தினால் யு.என்.கபிட்டாஸ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

56 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்கள் இவ்வாறு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (405)

# முல்லைத்தீவில் 65 சுகாதாரத்தொண்டர்களுக்கு சுத்திகரிப்புத் தொழிலாளர் நியமனங்கள்

புதுக்குடியிருப்பு, ஜூன்19

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளில் பல வருடங்களாகச் சுகாதாரத் தொண்டர்களாகக் கடமை புரிந்து வந்த 65 பேர் சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக கடந்த மாதம் 31 ஆம் திகதி நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர்.

இவர்கள் நீண்ட காலமாக பல நெருக்கடிகளுக்கு மத்தியில் சேவையாற்றி வந்தனர் என்றும்-தற்போதுதான் இவர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் - முல்லைத்தீவு பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் து.வி.ஜெயகுலராசா தெரிவித்துள்ளார்.

நிரந்தர நியமனம் பெற்ற 65 பேரின் விவரம் வருமாறு:

எஸ்.நிர்மலா (நட்டாங்கண்டல்), ரி.இராஜேஸ்வரி (விசுவமடு), எஸ்.தங்கேஸ்வரி (உடையார்கட்டு), எஸ் சசிகலா (மாங்குளம்), கே.சுதா(ஐயன்கன்குளம்), சி.மேரிமதாவீனா (முள்ளியவளை),எஸ்.யோகேஸ்வரி (உடையார்கட்டு), ஜே.ரஜனி (நட்டாங்கண்டல்), எஸ்.தயாதர்ஷினி (முள்ளியவளை), சாந்தமீனா (முள்ளியவளை).

எஸ்.சந்திரகலா (முத்தையன்கட்டு), ரி.காந்திமதி (புதுக்குடியிருப்பு), வீ.தவச்செல்வி (நட்டாங்கண்டல் ), தீ.தேவகி (அம்பலவன் பொக்கணை), சிவறஜனி (மாங்குளம்), எஸ்.மலர்தேவி (உடையார்கட்டு), ஆர். கலைமதி (தேவிபுரம்), எஸ்.அஞ்சுதமலர் (முள்ளிவாய்க்கால் கிழக்கு), ஜெயலக்சுமி (முள்ளியவளை), கே.தவப்பிரதா (புதுக்குடியிருப்பு).

கே.மோகனதாஸ் (யோகபுரம்), மிரியதர்ஷனா (மல்லாவி), சீ.சாந்தலக்சுமி (முல்லைத்தீவு), பீ.சசிகலா (மல்லாவி), எம்.ரதீனா (பாலிநகர்), பி.மீனலோஜினி (யோகபுரம்), தி.நந்தினி (புதுக்குடியிருப்பு), ரி.வனிதா (உண்ணப்புலவு), எஸ். ஜெயராணி (செல்வபுரம்), கே.செல்வநிதி (நட்டாங்கண்டல்).

பகீரதி (பாண்டியன்குளம்), பி.மஞ்சுளா (புதுமுறிப்பு), எஸ். சகீலா (நட்டாங்கண்டல்), எம். சதீஸ்குமாரி (கைவேலி), ரீ. மேற்றலின் றோஸ் (புதுக்குடியிருப்பு), வீ.சுமதி (முல்லைத்தீவு), பி.ஜெயலலிதா (முள்ளியவளை), பீ.பாலேஸ்வரி (வற்றாப்பளை), ரி.சித்திரா (முள்ளியவளை), ரி.அருள்நேசன் (முள்ளியவளை).

எஸ் ஜெயசீலி (முள்ளியவளை), என்.சுதர்சினி (முத்தையன்கட்டு), பீ. செல்வரதி (யோகபுரம்), எஸ்.தேன்மொழி (யோகபுரம்), சீ.சியாமதி (கேப்பாபுலவு), கே.வாணி (வள்ளிபுனம்), எ.பரமேஸ்வரி (புதுக்குடியிருப்பு), சரோசாதேவி (விசுவமடு), எஸ்.பாஸ்கரன் (யோகபுரம்), கே.ஜெயந்தினி (யோகபுரம்).

எஸ் வினோதினி (புதுக்குடியிருப்பு), எவ்.ஜெயரூபி (மாமூலை), கே.விமலினி (அனிஞ்சியன்குளம்), வி.வளர்மதி (ஒட்டறுத்தபுலம்), எஸ்.பத்மாவதி (செல்வபுரம் தெற்கு); எஸ்.சுகிர்தா (துணுக்காய்), கே.செல்வக்குமாரி (துணுக்காய்), பி.சாந்தினி (ஒட்டுசுட்டான்), எம்.பிறேமளா (அனிஞ்சியன்குளம்), ரி.தமிழ்ச்செல்வி (புதுக்குடியிருப்பு).

ஏ.சாவித்திரி (புதுக்குடியிருப்பு), கே.பிறேமலதா (முல்லைத்தீவு), வீ.மஞ்சுளா (மாமூலை), வீ.அனிஸ்ரா (புதுக்குடியிருப்பு), எஸ்.சாந்தகலா (முள்ளிவாய்க்கால்). (353)




மல்லாவி யோகன் பயிற்சிப் பாசறையின் உள்ளகப் படைப்பிரிவின் முதலாவது அணிக்கான பயிற்சி.நிறைவு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத் துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணை பொதுச்சுடர் ஏற்றுவதையும் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தமிழீழத் தேசியக்கொடி ஏற்றுவதையும் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் சிறப்புரை ஆற்றுவதையும் பயிற்சியாளர்கள் மண்டபத்தில் இருப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : பரந்தன் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சென்றல் வி.க. சுற்றுப்போட்டி பற்றீசியன்ஸ் அணி சம்பியனானது

யாழ்ப்பாணம்,ஜூன்19

யாழ். மத்திய விளையாட்டுக் கழகம் வி.டி. ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்தமாக நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றுச் சம்பியனானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மானிப்பாய் பரிஷ் வி.க. அணித் தலைவர் முதலில் தாம் துடுப்பெடுத்தாடுவதாகக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பய் பரிஷ் வி.க. அணியினர் 44.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது.

வீரசிங்கம், ஜெயராஜ், ஜெயதீபன், சிவாஸ்கர் ஆகியோர் முறையே 21, 24, 32, 43 ஓட்டங்களை தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சுஜீவன் ஒன்பது ஓவர்கள் பந்துவீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெடுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பற்றீசியன் வி.க. அணியினர் 34.3 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 179 ஓட்டங்களைப் பெற்று ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் சிறந்த வீரராக பற்றீசியன் வி.கவைச் சேர்ந்த சுதர்சன் தெரிவுசெய்யப்பட்டார்.

தொடர் நாயகனாக மானிப்பாய் பரிஷ் வி.கவைச் சேர்ந்த என்.ஜெயராஜ் தெரிவு செய்யப்பட்டார்.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். இந்துக் கல்லூரியின் ஆசிரியர் ஆர். ரவீந்திரநாதனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக்கல்லூரிஆசிரியர் கே.சதாசிவமும் கலந்து கொண்டனர்.

இப்போட்டிக்கு மத்தியதர்களாக சண்தயாளனும், ரி.வசீகரனும் கடமையாற்றினர். (190)



பற்றீசியன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த எஸ்.சுதர்சன் பிரதம விருந்தினர் ஆர். ரவீந்திரநாதனிடம்மிருந்து சிறந்த வீரருக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெறுவதையும் ஆட்டத்தின் ஒரு கட்டத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன், தமிழினியன்)

# முன்பள்ளி விளையாட்டு விழா

வட்டக்கச்சி, ஜூன்19

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதி பிரபா முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடனும் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தின் ஆதரவுடனும் கிளிநொச்சி கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட இம் முன் பள்ளியின் விளையாட்டு விழா நிகழ்வுகள் கலைவாணி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றன.

முன்பள்ளியின் பெற்றோர், ஆசிரியர் சங்கத் தலைவர் த.சோதிநாதன் தலைமை யில் நடைபெற்ற இந்நிகழ்வில் மங்கல விளக்கினை வடக்கு-கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் த.நேச ராசா, முதன்மை ஆசிரியர் சாந்தமலர் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழ தேசியக் கொடியினை வட்டக்கச்சி வலயப் பொறுப்பாளர் ப.சீலன் ஏற்றினார். மாவீரர் கப்டன் பிரபாவின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரேற்றப்பட்டு, மலர் மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழர்புனர்வாழ்வுக் கழகக் கொடியினை கிளிநொச்சிகிழக்கு, புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் திருமதி சி.சிறீரஞ்சினி ஏற்றி வைத்தார். (405)



யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதிற்குட்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போடடியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரி அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. அணி வீரர்களையும், அதிபர், பொறுப்பாசிரியர்களையும் படத்தில் காணலாம். (86)

# யாழ்.மாவட்ட மெய்வன்மைப்போட்டி 23 ஆம் திகதி முதல் மூன்று தினங்கள்

யாழ்ப்பாணம், ஜூன்19

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப்போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி யாழ்பல்கலைக்கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன என்று யாழ்.மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுக் குழுச் செயலாளர் க.குமாரசாமி தெரிவித்துள்ளார்.

முதலாம் நாள், இரண்டாம்நாள் நிகழ்வுகள் 23 ஆம், 24ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரையும் இடம்பெறும்.

மூன்றாம் நாள் நிகழ்வுகள் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெறும்.

போட்டியாளர்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட நிகழ்ச்சி ஒழுங்கின்படி போட்டிகள் யாவும் இடம்பெறுமெனவும்-

போட்டியாளர்கள் அனைவரும் உரிய நேரத்திற்கு மைதானத்திற்கு வருகை தர வேண்டுமெனவும்-

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டுக்குழுச் செயலாளர் கேட்டுள்ளார்.

# கிளிநொச்சி ம.வி. அணி வெற்றி

வட்டக்கச்சி, ஜூன்19

புதுக்குடியிருப்பு சுப்பராங் அணியினருக்கெதிரான கிரிக்கெட் போட்டியில் கிளி நொச்சி மகாவித்தியாலய மகாதீபம் அணி 18 ஓட்டங்களால் வென்றது.

புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற 35 ஓவர்களைக் கொண்ட கடினப் பந்துப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி ம.வியின் மகாதீபம் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 35 ஓவர் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 180 ஓட்டங்களைப் பெற்றது. நிதர்சன் 35 ஓட்டங்களைப் பெற்றார். இறுதி விக்கெட் டுக்களுக்கான இணைப்பாட்டத்தில் 52 ஓட்டங்கள் பெறப்பட்டன. இந்த இணைப்பாட்டத்தில் சேந்தராஜ் 27 ஓட்டங்களையும் த.சஞ்சீவன் 23 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காது பெற்றனர். சுப்பராங் அணியின் பிரதீபன் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சுப்பராங் அணி 26 ஓவர் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தீபராஜ் 39 ஓட்டங்களைப் பெற்றார். மகாதீபம் அணியின் நிதர்சன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இறுதியில் 18 ஓட்டங்களால் கிளிநொச்சி மகாவித்தியாலய மகாதீபம் அணியினர் புதுக்குடியிருப்பு சுப்பராங் அணியினரை வென்றனர். (405)

# வழிகாட்டல் கருத்தரங்கு

ஜனசக்தி காப்புறுதி நிறுவனம் நடத்தும் வேலைவாய்ப்பு தொடர்பான வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்குயாழ்பொது நூலகக் கேட் போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும்இளைஞர்களுக்கு தொழில்சார் விடயங்களை அறிவுறுத்தும் வகையில் இவ் வழிகாட்டல் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது. (202)


அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்
துலாம்
788 சிவப்பு
16-06-2006
செல்லுபடியாகும் தொடர் இல. 5219257-5233503
வெற்றி இலக்கங்கள் 07 10 27 51
ஜக்பொட் பரிசு ரூபா 23,67,900/- வெல்லப்பட்டுள்ளது
மொத்தப் பரிசுத் தொகை ரூபா 93,65,830/-
தொடர் இல. 4336610 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கெட்டுக்கள் 2006 ஜூன் மாதம் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்தப் பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 3,14,058 | 10/- | 31,40,580/- |
| 2 இலக்கங்கள் | 28,826 | 20/- | 5,76,520/- |
| 1 இல+லக்கினம் | 28,561 | 30/- | 8,56,830/- |
| 2 இல+லக்கினம் | 2,640 | 100/- | 2,64,000/- |
| 3 இலக்கங்கள் | 763 | 500/- | 3,81,500/- |
| 3 இல+லக்கினம் | 71 | 5,000/- | 3,55,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 1,00,000/- | 4,00,000/- |
| 4 இல+லக்கினம் | 1 | 23,67,900/- | 23,67,900/- |
| மொத்தம் | | | 83,42,330/- |
| முச்சக்கர வண்டிகள் | 5 | 2,04,700/- | 10,23,500/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 3,74,929 | | 93,65,830/- |

இந்த செவ்வாய்க்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா 10,00,000/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கெட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 05 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| இரத்தினபுரி | 5229392-8-53 |
| மொனராகலை | 5227489-9-87 |
| புத்தளம் | 5222088-7-23 |
| ஹம்பாந்தோட்டை | 5220307-2-70 |
| பொலன்னறுவை | 5221608-1-51 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-03



தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு நிர்வாகத்தின் கீழ்
இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் கணினிப்பயிற்சி நிலையமும் ஆங்கில வள நிலையமும்
401/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 401/1, Kasturiyar Road, Jaffna.
கிராமிய தகவல் தொழில் நுட்ப செயற்திட்டதின் கீழ் இலண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலய அனுசரணையுடன் இயங்கி வரும் யாழ் பயிற்சி நிலையத்தில் புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
ஆரம்பமாகும் கணினிப் பயிற்சிகள்
1) Basic Computer Application 2) Desktop Publishing 3) Hard ware
Online Classes
ஆங்கிலப்பயிற்சி வகுப்புக்களும் ஆரம்பம்
காலம்: 3 - 4 மாதங்கள்
கணினிப்பயிற்சி நெறியினை பூர்த்தி செய்த மாணவர்கள் சான்றிதழ்களை பயிற்சி நிலையத்தில் பெற்றுக் கொள்ளவும்
கிராமிய தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையம்
RURAL IT TRAINGNG CENTER
401/1, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். | 114, டச்சு வீதி சாவகச்சேரி. | புகையிரத நிலைய வீதி மன்னார். | 6/77, ஆரியபுர பொகவந்தலாவ. | 19/1, ஆஸ்பத்திரி வீதி தல்முனை.



முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
19.06.2006



திரு. திருமதி சிவரூபன் சுரேகா
தம்பதியரின்
செல்வப் புதல்வி சி.திவ்யா
தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (19-06-2006) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார். இவரை அம்மப்பா,அம்மம்மா, பெரியம்மா (பிரான்ஸ்), பெரியம்மா (கனடா), பெரியம்மா (லண்டின்), சித்தி ஆகியோர் இறைவன் அருளால் பல்கலையும் பெற்று பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ வாழ்த்துகிறார்கள்.
அம்மப்பா.
ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு.
(5132) (39-14-11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FIFA WORLD CUP GERMANY 2006

# 18 ஆவது உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டி

## கானாவின் அதிரடி ஆட்டத்தால் திண்டாடியது செக்.குடியரசு



செக்.குடியரசுக்கு எதிரான லீக் போட்டியில் கானா தனது துடிப்பான ஆட்டத்தால் 2-0 என்ற கோல் கணக்கில் அதிரடி வெற்றி பெற்றது.

நேற்றுமுன்தினம் 'ஈ' பிரிவிற்கான போட்டி நடந்தது. கொலோனில் நடந்த இப்போட்டியில் செக்.குடியரசு, கானா அணிகள் மோதின. முன்னதாக செக்.குடியரசு, அமெரிக்காவை வீழ்த்தி இருந்தது. கானா, இத்தாலியிடம் தோல்வி அடைந்திருந்தது. எனவே, இப்போட்டியில் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கியது கானா.

ஆட்டம் தொடங்கிய 68ஆவது வினாடிகளில் கானா வீரர் அசோமா கியான் அசுர வேகத்தில் முதல் கோலை அடித்தார். நட்சத்திர வீரர் ஸ்டீபன் அப்பைஜாபந்தைக் கொடுக்க ஆரம்பத்திலேயே அணியை முன்னிலை பெறச் செய்தார் கியான். தொடர்ந்து அற்புதமான ஆட்டத்தை வெளிப்படுத்திய கானாவிடம் செக். குடியரசினால் தாக்குப்பிடிக்க முடியவில்லை.

39 ஆவது நிமிடத்தில் கானா வீரர் ஸ்டீபன் அப்பைஜாவுக்கு கிடைத்தது அடுத்த வாய்ப்பு. கோல் அடிப்பார் என்று எதிர்பார்த்த நேரத்தில்பந்து கோல் கம்பத்துக்கு வெளியே சென்றது.

முதல் பாதியில் கோல் அடிக்காத செக். குடியரசு, இரண்டாவது பாதியிலும் தொடர்ந்து திணறி வந்தது. இந்நிலையில் 64 ஆவது நிமிடத்தில் கானா வீரர் மத்தியூ அமோவை செக். வீரர் தோமஸ் உஜ்பாலுசி தள்ள கானாவுக்கு 'பெனால்டி' வாய்ப்பு கிடைத்தது. கோல் அடிக்கும் வாய்ப்பு அசோமா கியானுக்கு வழங்கப் பட்டது. அதனை வேகமாக அவர் அடிக்க பந்து கோல்கம்பத்தில்பட்டுவெளியேறியது. 'பெனால்டி' வாய்ப்புக் கொடுத்த நடுவரிடம் செக். குடியசின் உஜ்பாலுசி பிரச்சினை செய்ய, சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு அவர் வெளியேற்றப்பட்டார்.

ஆட்டத்தின் 82 ஆவது நிமிடத்தில் கானா வீரர் சுல்லி முன்டாரி இரண்டாவது கோலை அடிக்க 2-0 என்ற கணக்கில் அபாரமாக வெற்றி பெற்றது கானா.

### உலகக் கோப்பைத் தொடரில் அதிக கோல் அடித்தவர்கள்

| வீரர் | கோல் |
|---|---|
| முல்லர் (ஜேர்மனி) | 14 |
| பன்டையன் (பிரான்ஸ்) | 13 |
| பீலே (பிரேஸில்) | 12 |
| றொனால்டோ (பிரேஸில்) | 12 |
| சான்டர் கோசில் (ஹங்கேரி) | 11 |

## 20 லட்சம் பேர் பார்த்த ஆட்டம்

கடந்த 12ஆம் திகதி செக். குடியரசு அமெரிக்கா இடையே நடந்த ஆட்டத்தை, அமெரிக்க நாட்டில் 20 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தொலைக்காட்சியில் பார்த்தனர். ஈ.எஸ்.பி.என் 2 அலைவரிசையில் இது காட்டப்பட்டது. உலக கோப்பை கால்பந்து போட்டிகள் தொடங்கியது முதல் அமெரிக்காவில் அதிகம் பேர் பார்த்த ஆட்டம் இதுதான். இந்தப் போட்டியில் அமெரிக்கா செக்.குடியரசிடம் தோற்றது.

## ஈரானை வீழ்த்திய போர்த்துக்கல் 2ஆம் சுற்றுக்கு முன்னேறியது

உலகக் கோப்பைத் தொடரின் இரண்டா வது சுற்றுக்கு முன்னேறியது போர்த்துக்கல். ஈரானுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடந்த லீக் போட்டியில் டீகோ, கிறிஸ்டியானா றொனால்டோ ஆகியோர் கைகொடுக்க 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது போர்த்துக்கல். இரண்டு போட்டிகளில் தோல்வி அடைந்த ஈரான் தொடரை விட்டு வெளியேறியது.

பிராங்பேர்ட்டில் நேற்றுமுன்தினம் நடந்த 'டி' பிரிவு லீக் போட்டியில் போர்த்துக்கல், ஈரான் அணிகள் மோதின.

ஆட்டத்தில் முதல் மூலை உதை வாய்ப்பு 7ஆவது நிமிடத்தில் கிடைத்தது. போர்த்துக்கல் அணித் தலைவர் லூயிஸ் பிகோ அடிக்க, அதை கோலாக்க முயன்றார் மனீச். ஆனால் அது கோல் கம்பத்துக்கு வெளியே சென்றது.

ஈரானின் நம்பிக்கை வீரரான அலி கரிமி, அபாரமாக கொடுத்த பந்து பரிமாற்றங்களை எல்லாம் மற்ற வீரர்கள் வீணாக்கி விட்டனர். ஆட்டத்தின் முதல் பாதி வரை இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை. ஆட்டத்தின் 63 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் அணித்தலைவர் லூயிஸ் பிகோ பந்தைக் கொடுக்க அதைக் கோலாக மாற்றினார் டீகோ.

போர்த்துக்கல் அணியின் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ றொனால்டோ அபாரமாக செயல்பட்டார். ஆட்டத்தின் 34 ஆவது நிமிடத்தில் லூயிஸ் பிகோ, கொடுத்த பந்தை இடது காலால் உதைத்தார் றொனால்டோ. போர்த்துகல்லுக்கு ஒரு கோல் கிடைத்துவிடும் என அனைவரும் எதிர்பார்த்த நேரத்தில் அது கோல்கம்பத்தில் பட்டு வெளியேறியது. ஆட்டத்தின் 77 ஆவது நிமிடத்தில் பிகோவை, ஈரானின் யாஹ்யா கோல்மாஹம்மடி பெனால்டி பகுதியில் முரட்டுத்தனமாக தடுக்க, போர்த்துக் கலுக்கு பெனால்டி வாய்ப்பு வழங்கப் பட்டது. பல முறை வாய்ப்புகளை நழுவவிட்ட கிறிஸ்டியானோ றொனால்டோ, கண் இமைக்கும் நேரத்தில் பெனால்டி கோல் அடித்து அசத்தினார்.



தொடர்ந்து இரண்டு கோல் அடித்த போர்த்துக்கல் 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது. இதற்கு பதிலடி கொடுக்க ஈரான் வீரர்கள் எவ்வளவோ போராடினர். ஆனால் முடியவில்லை. ஈரானுக்கு வெற்றி பெற்று தருவார் என எதிர்பார்க்கப்பட்ட முன்னணி வீரர் அலி கரிமி, சிறப்பாக ஆடிய போதும் கோல் அடிக்க முடியவில்லை. ஆட்டத்தின் 64 ஆவது நிமிடத்தில் அவர் வெளியேற மாற்று வீரராக பெரிடூன் சன்டி களத்தில் இறங்கினார். இறுதியில் போர்த்துக்கல் 2-0 என்ற கணக்கில் ஈரானை வீழ்த்தியது. இவ்வெற்றியின் மூலம் போர்த்துக்கல் 40 ஆண்டுகளுக்கு பிறகு முதன்முறையாக உலககோப்பை தொடரின் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியது. இரண்டு போட்டியில் தோல்வி அடைந்த ஈரான் அணி தொடரிலிருந்து வெளியேறியது.

### இன்றைய ஆட்டங்கள்

பிரிவு 'ஜி' - டோகோ - சுவிஸ் மாலை 7மணி
பிரிவு 'எச்' - சவூதி - உக்ரைன் இரவு 10 மணி
பிரிவு 'எச்' - ஸ்பெயின் - துனிசியா அதிகாலை ஒரு மணி

## றொனால்டோ ஆபத்தானவர்



மியூனிச், ஜூன்19

'பிரேசில் அணியின் நம்பிக்கை நட்சத்திரம் றொனால்டோ மிகவும் ஆபத்தானவர்' என்று ஆஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் கஸ் ஹிட்டிங் தெரிவித்துள்ளார்.

குரோஷியாவுக்குஎதிரான ஆட்டத்தில் றொனால்டோ சரியாகப் பிரகாசிக்கவில்லை என்ற குற்றச்சாட்டுடன் அவர் மீது கடும் விமர்சனம் எழுந்துள்ள நிலையில் ஆஸி. பயிற்சியாளரின் கருத்து வித்தியாசமாக உள்ளது.

'சில சமயம் அவர் தூங்குவது போல் தெரிந்தாலும் ஒன்று அல்லது இரண்டு நிமிடத்தில் அவர் வென்றுவிடுவார் - என்றும் அவர் கூறியுள்ளார்.

றொனால்டோ உலகத் தரம் வாய்ந்தவர். அவர் கால்பந்தாட்ட வாழ்க்கையில் எங்களைப் போல சில ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தவர்தான். ஆனாலும் அவர் மிகுந்த திறமை சாலி என்று ஆஸி. அணியின் தலைவர் மார்க் விதுகா கூறியுள்ளார்.

## சேர்பியா - அமெரிக்கா ஆட்டத்திலிருந்து...

★ சேர்பியாவுக்கு எதிரான ஆட்டத்தில் ஆர்ஜென்டீனா அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இது உலகக்கோப்பை போட்டியில் ஓர் அணி பெறும் மிகப்பெரிய 10ஆவது வெற்றியாகும். இந்தப் போட்டியில் 2ஆவது கோல் மிகவும் நேர்த்தியாக இருந்தது. மளமளவென்று ஆர்ஜென்டீனா வீரர்கள் பலரால் பாஸ் செய்யப்பட்டு அடிக்கப்பட்ட இந்தக் கோல் காண்போரைக் கவரும் விதத்தில் இருந்தது.

★ சேர்பியாவுக்கு எதிரான ஆட்டத்தில் ஆர்ஜென்டீனா அணி வீரர் மெஸ்சி 2 கோல் அடித்தார். 18 வயது இளம் வீரரான மெஸ்சி கோல் அடித்ததன் மூலம் குறைந்த வயதில் உலக கோப்பைப் போட்டியில் கோல் அடித்த 6ஆவது வீரர் என்ற பெருமையைப் பெற்றார். பிரேஸிலின் முன்னாள் வீரர் பீலே தது 17ஆவது வயதில் கோல் அடித்தமை குறிப்பிடத்தக்கது.

## இத்தாலியை சமாளித்த அமெரிக்கா ஆட்டம் சமநிலையில் முடிந்தது

கெய்ஸர்டைன், ஜூன்19

பலம் வாய்ந்த இத்தாலி அணிக்கு அமெரிக்கா கடும் நெருக்கடி கொடுக்க, இரு அணிகளுக்கு இடையிலான லீக் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

நேற்றுமுன்தினம் 'ஈ' பிரிவை சேர்ந்த இத்தாலி, அமெரிக்க அணிகள் கெய்சர்ஸ்லாடனில் மோதின. முதல் போட்டியில் அமெரிக்கா, செக். குடியரசிடம் தோல்வி அடைந்ததால் இப்போட்டியில் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் களம் இறங்கியது.

விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியில் முதல் கோலை இத்தாலி பதிவு செய்தது. ஆட்டத்தின் 22 ஆவது நிமிடத்தில் கிடைத்த தடையற்ற உதை வாய்ப்பை ஆன்ட்ரே பிர்லோ அடிக்க, அல்பர்டோ கிலார்டினோ தலையால் முட்டி கோல் அடித்தார். அடுத்த ஐந்து நிமிடங்களில் அமெரிக்கா இதற்கு பதிலடி கொடுத்தது. தடையற்ற உதையை அமெரிக்க வீரர் பாபி கன்வி அடித்தார். இத்தாலி வீரர் கிறிஸ்டியன் ஜக்கார்டோ அதை தடுக்க நினைக்க, அதிர்ஷ்டவசமாக பந்து அவரது காலில் பட்டு கோலாக மாறியது.

முதல் பாதியில் இரு அணிகளும் ஒரு புள்ளிகள் பெற்று சமநிலையில் இருந்தன. அடுத்த பாதியில் இரு அணிகளுக்கும் கடும் போட்டி நிலவியது. ஆட்டத்தின் 65 ஆவது நிமிடத்தில் அமெரிக்காவின் பிரயன் மெக் பிரய்ட் ஒரு கோல் அடிக்க அரங்கமே அதிர்ந்தது. ஆனால் நடுவர் அதை முறையற்ற கோல் என கூறி விட்டார். பிரயன் கோல் அடிப்பதற்கு முன்பாக, இத்தாலியின் கியான்லூகி பபான் காயத்துக்கு உள்ளானார். அதன் அடிப்படையில் நடுவர் அந்த கோலை மறுத்து விட்டார்.

இந்த ஆட்டத்தில் மட்டும் மூன்று வீரர்கள் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப் பட்டனர். முதலாவதாக இத்தாலியின் டி றோசி சிவப்பு அட்டை பெற்றார். அடுத்த கட்டமாக இரண்டு அமெரிக்க வீரர்கள் (பாப்லோ மாஸ்ட்ரோனி, எட்டி போப்) ஆகியோர் வெளியேற்றப்பட்டனர். வெற்றி பெற இரு அணிகளும் கடுமையாகப் போராடியதால் பல வீரர்கள் காயத்துடன் வெளியேறினர். இரண்டாவது பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்காததால் ஆட்டம் 1-1 என்ற கணக்கில் சமநிலையில் முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லைப்பிட்டிக்கு மின்சாரம்: நடவடிக்கை எடுப்பதாக தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்19

அல்லைப்பிட்டிப் பகுதிக்கு மின்சார வசதிகளை துரித கதியில் வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்க எடுத்துள்ளார் என சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த சுமார் இருபது வருட காலமாக மின்சார வசதிகள் இன்றி பல்வேறு இடையூறுகளுக்கு முகங்கொடுத்துவரும் அல்லைப்பிட்டி மக்களின் வசதி கருதி, அப்பகுதிக்கு உடனடியாக மின்சார வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமும் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் யாழ். - கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக்குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெயர்ந்த நிலையில் யாழ். அடைக்கலமாதா மற்றும் நாவாந்துறை புனித நிக்கிலஸ் தேவாலயங்களில் தங்கியிருந்த அல்லைப்பிட்டி மக்களைச் சந்தித்தபோது அவர்களின் அடிப்படை மற்றும் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்து தருவதாகத் தான் அம்மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளுக்கு அமைவாக தற்போது அல்லைப்பிட்டிப் பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொதுமக்களது பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் பொருட்டு யாழ். அலுவலகத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போது கூடியிருந்த ஆயிரக்கனக்கான மக்கள் மத்தியில் உரையாற்றும்போதே அமைச்சர் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மீளக்குடியமர்ந்துள்ள அல்லைப்பிட்டி மக்களுக்கான இழப்பீடுகள் யாவும் விரைவில் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்த அமைச்சர் அவர்கள் அப்பகுதியில் மருத்துவ வசதிகளைப் பெற மருத்துவமனைகள் இல்லாத நிலையில் அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் அப்பகுதி போக்குவரத்து வசதிகளையும் ஏற்படுத்தி கொடுக்கும் நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

அல்லைப்பிட்டி மக்கள் தத்தமது வீடுகளுக்கு மின்சார இணைப்புகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கான படிவங்கள் இன்னும் ஓரிரு தினங்களில் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் இவ் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து அம் மக்கள் தங்களது வீடுகளுக்கு மின்சார வசதிகளைப் பெற்றுக்கொள்ள இயலும் என்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்த க்கதாகும் - என்றுள்ளது.

# தென்மராட்சி பிரதேச செயலகம் நடத்திய கலை, இலக்கியப்போட்டி முடிவுகள்

தென்மாராட்சி, ஜூன்19

தென்மராட்சிப் பிரதேச செயல ்த்தினால் இவ் வருடத்திற்குரிய தேசிய கலை, இலக் யப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கட்டுரை, சிறுகதை, கவிதை, காவியம், கவிதை விமர்சனம், சிறுகதை விமர்சனம், ஆங்கிலப்பாட்டு ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன.

மாணவர்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிகளும் ஏனையோருக்கான திறந்த போட்டிகளும் நடத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

போட்டி முடிவுகள் விவரம் வருமாறு:-

**கட்டுரை - கனிஷ்டபிரிவு**

ப.மதுவந்தி-சாவகச்சேரி இந்துக் கல்லூரி, வ.ஜெசிந்தன் - மட்டுவில் சரஸ்வதி வித்தி., கு.நித்தியா - சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**சிரேஷ்ட பிரிவு**

கு.ஜெயமோகன்-கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயில் அறநெறிப்பாடசாலை.

**கவிதை**

சி.சிவரூபன்-மட்டுவில் மகாவித்தி., க.சஜந்துஜா - சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சி.உதயதீபன் - மட்டுவில் முத்துமாரியம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை.

**திறந்த போட்டிகள் - சிறுகதை**

வ.சின்னப்பா - தனங்கிளப்பு , தி.உதயலதா- கைதடி வடக்கு, திருமதி தே.பஞ்சாட்சரம் - கச்சாய் வீதி, கொடிகாமம்.

**காவியம்**

ந.புகன்சிறிந்திரன் - நுணாவில் கிழக்கு, ந.புகன்சிறிந்திரன் - நுணாவில் கிழக்கு, சி.சிவாகர் - கல்வயல்.

**கவிதை**

தி.உதயலதா-கைதடி வடக்கு, சி.காசிப்பிள்ளை - அல்லாரை வடக்கு.

**கவிதை விமர்சனம்**

சி.சிவரூபன் - கல்வயல்.

**சிறுகதை விமர்சனம்**

சி.சிவரூபன் - கல்வயல்

**ஆங்கிலப் பாட்டு**

வ.சின்னப்பா - தனங்களப்பு (117)

# வீதிப் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்19

ஆசிய அபிவிரு தி வங்கியினால் அனுமதிக்கப்பட்ட சில திகள் மீள்புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

'நிக்கொட்' யாழ். மாவட்ட பிரதிப் பணிப்பாளர் எந்திரி க.நவரத்தினராசா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் பிரதேச சபைக்குட்பட்ட சில வீதிகள் மீள்புனரமைப்பு செய்ய ஆசிய அபிவிருத்தி அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட வீதிகள் மீள்புனரமைப்புக்காக பத்திரிகை வாயிலாக விளம்பரம் செய்யப்பட்டுள்ளன.

எனவே, வீதி புனரமைப்புடன் சம்பந்தப்பட்ட சபை செயலாளர்கள் காலதாமதமின்றி வேலையை ஆரம்பிப்பதற்கு உதவுவதுடன் ஆர்வமுடைய ஒப்பந்தகாரர்களை தொடர்பு கொள்ளுமாறும் மாவட்ட 'நிக்கொட்' பிரதித் திட்டப் பணிப்பாளர் க.நவரத்தினராசா கேட்டுள்ளார். (185)

## மரண அறிவித்தல்

### திருமதி சின்னம்மா தம்பிஐயா

(மலாயன் பென்சனர்)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா தம்பிஐயா அவர்கள் நேற்று (18-06-2006) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை தம்பிஐயா (மலாயன் பென்சனர்) அவர்களின் அன்பு மனைவியும் த.தேவராஜா (முன்னாள் பிரதி அதிபர் - கொக்குவில் இந்துக் கல்லூரி), காலஞ்சென்றவர்களான திருமதி தேவராணி சுந்தரலிங்கம், திருமதி கமலராணி உலகேஸ்வரன் மற்றும் திருமதி தர்மகுலராணி சண்முகலிங்கம், திருமதி அருந்தவராணி கதிர்காமநாதன், த.இணுவை சுப்பிரமணியம் (கடவுள்-அதிபர்- கட்டுடை சைவ வித்தியாசாலை), த.செல்வானந்தராஜா (செல்வம்) ஆகியோரின் பாசமிகு தாயும் இ.சுந்தரலிங்கம் (முன்னாள் கல்விப்பணிப்பாளர்), பொ.உலகேஸ்வரன் (பொறியியலாளர்), சி.சண்முகலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), இ.கதிர்காமநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்), திருமதி தே.அருந்ததி, ஆனந்தகௌரி, திருமதி இ.செல்வநாயகி, திருமதி செ.ஜெயராணி ஆகியோரின் மாமியும் கா.செல்லத்துரையின் சகோதரியும் வை.சிவம், வை.சிவநேசன் ஆகியோரின் பெரிய தாயும் Dr.சு.சுதர்சன் (ஆஸ்திரேலியா), திருமதி சு.இரட்ணேஸ்வரி (ஆஸ்திரேலியா), உ.முரளீதரன் (லண்டன்), திருமதி மு.சங்கீதா (லண்டன்), திருமதி செ.சுபாஷினி (கொழும்பு), மு.செல்வவிநாய கம் (கொழும்பு), திருமதி மு.மீரா (கல்முனை), Dr.கோ.முகுந்தன் (கல்முனை), திருமதி கு.சுபர்ணா (ஆசிரியை, வவுனியா), சி.குகன் (வவுனியா), Dr.ச.சுகன்யா, க.ஆர்த்திகா (யாழ்.இந்து மகளிர் கல் லூரி), இ.நிலானி (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியும் செ.அஜீத் (கொழும்பு), மு.மிதுலன் (கல்முனை) ஆகி யோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-06-2006) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் பூவோடை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

'ஆர்த்தியம்பதி'
வட்டுவினி,
இணுவில் மேற்கு,
இணுவில்.
தொ.பே.: 222 7692

தகவல்:
த.தேவராஜா மற்றும் குடும்பத்தினர்.

(51343)(26.14.11)

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா சுப்பிரமணியம்



(முன்னாள் சாரதி - இ.போ.ச. )

கம்பர்மலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சுப்பிரமணியம் (சுப்பு) அவர்கள் நேற்று (18-06-2006) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - பொன்னுக்கண்டு தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற வல்லிபுரம் - அமராவதி தம்பதியரின் அன்பு மருமகனும் அம்பிகாவதியின் பாசமிகு கணவரும் கண்மணி, சந்திரன், சிவராசா, குருநாதன், செல்வச்சந்திரன், இந்திரன், சின்னக் கிளி, செல்லம்மா, அரிச்சந்திரன், மகேந்திரம், மாயப்பெருமாள் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுலோஜினி, அனோகரன், சுதேஸ்கரன் (லண்டன்), தயாகரன் (கனடா), றமேஸ்வரன் (லண்டன்), சுதாகரன் (மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குணராசா, ரஜேஸ்வரி, வசந்தராணி, சர்மிளா ஆகியோரின் பாசமிகு மாமனும் மேகலா, றஜிதன், கோபிறஞ்சன், விஸ்னிகரன், வேணுசன், தரணிகா, விதுஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-06-2006) திங்கட்கிழமை மு.ப.11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரிக்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*முல்லைக்கட்டை வீதி,*
*கம்பர்மலை, உடுப்பிட்டி.*
*தொ.பே.: 226 3559*

(51345)(26.11.24)

தகவல்:
குடும்பத்தினர்.

### ம.அ.சரவணமுத்து



யாழ்ப்பாணம், புலோலியம்பதியைப் பிறப்பிடமாகவும் வட்டுவத்தை, வதிரியை வசிப்பிடமாகவும் கொண்ட ம.அ.சரவணமுத்து சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் சுப்பிரமணியம் (புலோலித்தம்பி), நாகநாதர் மயில்வாகனம் (வடமராட்சியில் முதலாவது சட்டத்தரணி) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற அருளம்பலம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற எஸ்.கே.சுப்பிரமணியம் பர்வதப்பிள்ளையின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மண்டலேஸ்வரியம்மாவின் அன்புக் கணவரும் அ.ச.பூவேந்திரன் (பிரதம நிறைவேற்று அதிகாரி, குடும்ப புனர்வாழ்வு நிலையம், கொழும்பு), திருமதி சறோஜினி சுப்பிரமணியம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தவமணி (சுன்னாகம்), க.சுப்பிரமணியம் (இளைப்பாறிய நீர்ப்பாசன பொறியியலாளர்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று (19.06.2006) திங்கட்கிழமை பி.ப. 2 மணிக்கு ஆலங்கட்டை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'குகவாசா',*
*வதிரி, கரவெட்டி.*

(31348)

தகவல்:
அ.ச.பூவேந்திரன்

### கதிரித்தம்பி மகேஸ்வரி



ஆலடி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கதிரித்தம்பி மகேஸ்வரி அவர்கள் 17-06-2006 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரித்தம்பியின் அன்பு மனைவியும் சரஸ்வதி, பத்மாவதி, கலாவதி, சிவநாதன் (சிவா- ரட்ணா மோட்டேஸ்) சிவபாலன் ஆகியோரின் அன்புத் தாயும் கனகரத்தினம் **(Doha)**, சதாசிவம், துரைசிங்கம் ஜெயந்தி (பபா), இராஜ நங்கை (யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியும் கயலினி **(Augustralia)**, சுதாலினி (யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி), ஓங்காரரூபன், சதீஸ்வரன் **(Colombo.MLT)**, பிரதீஸ்வரன், குகதீஸ்வரன் (செல்வா காட்வெயாஸ்), நிஸாந்தீஸ் வரன் **(Doha)**, அமிர்தாலினி **(Canada)**, பிரதீபன் **(Doha)**, அனுசலா, துவாரகன், திலக்ஷ்னா, சிந்துஜன், விதுஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் மான்சிகா, கோகுலா, கோகுலன் **(Augustralia)**, ஆகியோரின் அன்புப் பூட்டியும் காண்டீபன் **(Augustralia)**, பாலச்சந் திரன் (யா/வட்டு திருநாவுக்கரசு ம.வி.), உதயானந் **(Canada)**, வாசுகி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-06-2006) திங்கட்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கரையான் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆலடி,*
*ஆனைக்கோட்டை.*

(சி/49746)(26.11.14)

தகவல்:
பிள்ளைகள்.


**IDM COMPUTER STUDIES, ISLANDWIDE (PVT) (LTD), JAFFNA BRANCH**

20+ YEARS · IDM

01. DIP.ICT: 1. Monday - 19.06.06 9.00 am } Week day
2. Wednesday - 21.06.06 9.00 am
3. Saturday - 24.06.06 9.00 am Weekend

02. NCC: IDES Saturday - 24.06.06 9.00 am,
04. MCP: Saturday - 24.06.06 12.00 noon,
06. Hardware: Monday - 19.06.06 9.00 am
Wednesday - 21.06.06 9.00 am

03. DIBM: Saturday - 24.06.06 3.00 pm,
05. HND: Sunday - 25.06.06 9.00 am,

**216, Navalar Road, Jaffna.**
**T.P.: 0214591398**

(c.49747) (39)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விடுதலைப்புலிகள் அமைப்பை ஐரோப்பிய ஒன்றியம் தடை செய்தமையைக் கண்டித்து ஐரோப்பிய நாடுகளில் கறுப்புப்பட்டி போராட்டம் நடைபெற்று வருவது தெரிந்ததே. கடந்த வாரம் நடைபெற்ற இந்த கறுப்புப் பட்டி போராட்டத்தில் ஐரோப்பியர்களும் இணைந்துகொண்டனர். ஐரோப்பியர்கள் பலரும் கறுப்புப் பட்டிகளை அணிந்திருப்பதை படங்களில் காணலாம்.

# மு.கா. அதிருப்தியாளர்களை இணைத்து புதிய அரசியல் கூட்டமைப்பு உருவாகிறது

கொழும்பு, ஜூன் 19

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை முற்றாக வீழ்த்தி முஸ்லிம் மக்கள் மத்தியிலான அதன் செல்வாக்கைக் கைப்பற்றும் நோக்கில் புதிய அரசியல் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முஸ்லிம் காங்கிரஸில் இருந்து பிரிந்து சென்று, தனிக்கட்சிகளை உருவாக்கி, அரசுடன் ஒட்டிக்கொண்டு அமைச்சுப் பதவிகளைப் பெற்றிருக்கும் முஸ்லிம் அமைச்சர்களே இக்கூட்டமைப்பை உருவாக்கத் திட்டமிட்டுள்ளனர் என நம்பகரமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணையத் தீர்மானித்திருப்பதன் காரணமாகவே கூட்டமைப்பை உருவாக்கிச் செயற்படும் நிலைப்பாட்டுக்கு முஸ்லிம் அமைச்சர்கள் வந்துள்ளனர் என்றும் - மிகவிரைவில் இதுபற்றி உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் - தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக கடந்தவாரம் அமைச்சர் அமீர் அலியின் அலுவலகத்தில் முஸ்லிம் அமைச்சர்கள் ஒன்றுகூடி ஆலோசனைகளை நடத்தியிருக்கின்றனர்.

தேசிய காங்கிரஸின் தலைவர் அமைச்சர் அதாவுல்லா, அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் அமைச்சர்கள் அமீர் அலி, ரிஷாத் பதியுதீன், நஜீப் ஏ. மஜீத் மற்றும் நுஆவின் சார்பில் அதன் முக்கிய பிரதிநிதிகள் சிலர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

பிரதியமைச்சர் சேகு இஸ்ஸதீன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இணைந்தால் கிழக்கில் அக்கட்சி பாரிய சக்தியாக விளங்கும் என்றும் - அக்கட்சியில் இருந்து பிரிந்து சென்று தனித்து இயங்கும் கட்சிகள் வீழ்ச்சிகாணும் என்றும் -

அச்சந்திப்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஆகவே, முஸ்லிம் காங்கிரஸின் அதிருப்தியாளர்கள் அனைவரும் ஓரணியில் சேர்ந்தால் மட்டுமே அக்கட்சியை வீழ்த்த முடியும் என்றும், அதற்கமைவாகக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கிச் செயற்படுவதென்றும் அச்சந்திப்பில் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கின்றது.

தேசிய காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் நுஆ ஆகிய கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கவிருக்கும் இக்கூட்டமைப்புக்கு அமைச்சர் அதாவுல்லாவைத் தலைவராக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளதாம்.

ஒரு மாதத்திற்கு முன்பும் ஒருதடவை இது தொடர்பாக ஆராய அமைச்சர் அமீர் அலி யின் அலுவலகத்தில் நள்ளிரவில் இவர் கள் அனைவரும் ஒன்றுகூடினர் என்றும் - கடந்தவாரம் இடம்பெற்றது இரண்டாவது ஒன்றுகூடல் என்றும்- தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (க)



போரூட் நிறுவனத்தின் உதவியுடன் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி வீதியில் கிராமிய வலுப்படுத்தலுக்கான இணையத்திற்கு முப்பது இலட்சம் ரூபா செலவில் கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்தக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் நடைபெற்றபோது, எடுக்கப்பட்ட படம் இது. இதில், போரூட் நிறுவன ஆற்றுப்படுத்தல் உத்தியோகத்தர் கே.குணேந்திரதாசன் அடிக்கல்லை நடுவதையும் அருகில் தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீ மோகனன், போரூட் நிறுவன (யாழ்.) நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் என். கோகுலதாஸ் காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

(படம்: ஊர்காவற்றுறைச் செய்தியாளர்)

## கண்ணீர் அஞ்சலி

எமது பீட 3ஆம் வருட மாணவன் *ந.திலீபன்*
அவர்களின் அன்புத் தந்தை

**நடராஜா**

அவர்கள் 16.06.2006 அன்று காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*விவசாயபீடம்*
*யாழ். பல்கலைக்கழகம்.* 16ஆம் அணி மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### ஆசைப்பிள்ளை திருச்செல்வம்



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் அல்வாய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசைப்பிள்ளை திருச்செல்வம் அவர்கள் நேற்று (18.06.2006) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசைப்பிள்ளை - தங்கம்மா தம்பதியினரின் மகனும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணபிள்ளை - பத்தினிப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும் தெய்வேந்திரராணியின் அன்புக் கணவரும் சுனீபன், சுபோசன் ஆகியோரின் தந்தையும் பாலசுப்பிரமணியத்தின் சகோதரனும் திருமதி பாலசுப்பிரமணியம், ரூபராணி (நோர்வே), ஆனந்தமலர் (கரவெட்டி), மனோரஞ்சிதமலர் (இந்தியா), சோமசுந்தரம் (சுவிஸ்), சந்திரகுமார் (சுவீடன்), செல்வக்கதிரமலை (சுவீடன்), ஸ்ரீ பாஸ்கரன் (கோபு - சுவீடன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2006) திங்கட்கிழமை அவரின் அல்வாய் தெற்கு இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அல்வாய் தெற்கு,*
*அல்வாய்.*
*T.P.No.: 0776 031538.* (51407) *தகவல்:* **குடும்பத்தினர்.**

## ஒத்துமாறல்

மேல்மாகாணத்தில் பட்டதாரி ஆசிரியராக (B.A) நியமனம் பெற்ற ஒருவர் யாழ்ப் பாணத்தில் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர் (B.A) ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார்.

**தொடர்பு :- 077 3068996.**


புதிய வெளியீடு



யுனிவர்சிட்டி புகழ் ஜீவன், சோனியா அகர்வால், விவேக் நடித்த
திருட்டு பயலே
மனோகரா
யாழ்ப்பாணம்
10.30, 2.30, 6.30 மட்டும்

A/L 2008
CHRIS: Mrs
TAMIL: Mr
LOG: Mr
DRAMA / HINDU: Mr M.
GEO -
ENG - Mr RAMANAN
* Gr 1 முதல் O/L வரை
* ENG MED Gr 6-7
* புலமைப்பரிசில் Gr 5
SHAMROCK

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
காட்சி நேரம் : 10.30, 2.30
சத்தியராஜ் (மாறுபட்ட 9 வேடம்), சூசன், விவேக், அப்பாஸ் நடித்த
"வணக்கம் தலைவா"
(அ-49188)

ராஜா யாழ்ப்பாணம்
பரத், பத்மபிரியா, ஆர்யா நடித்த
பட்டியல்
புதிய வெளியீடு
காட்சி நேரம்: 10.30, 2.30 மட்டும்


## மரண அறிவித்தல்கள்

### அருணாசலம் வேலாயுதன்

*(இளைப்பாறிய குடிவரவு, குடியகல்வு திணைக்கள உத்தியோகத்தரும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு அலுவலரும்)*



துவாளி வீதி, இமையாணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் பத்திரகாளி கோயிலடி, திருநெல்வேலி மற்றும் சென்.மேரிஸ் வீதி, மட்டக்குளி, கொழும்பு-15ஐ வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் வேலாயுதன் (16.06.2006) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் அமரர்களான அருணாசலம்-அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும் அமரர்களான கைலாசபிள்ளை-மாரிமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதியின் (இளைப்பாறிய ஆங்கில ஆசிரியை, யா/வேம்படி மகளிர் கல்லூரி, முன்னாள் பகுதிநேர ஆங்கில விரிவுரையாளர்,யாழ். பல்கலைக்கழகம்) அன்புக் கணவரும் ஸ்ரீகடம்பன் (லண்டன்), அநுராதா (லண்டன்), அநுபாமா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் றோகினி (லண்டன்), சிதம்பரதேவன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் லஷ்ட்ஷா, அச்சயா, அட்சரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2006) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் உடுப்பிட்டியில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***துவாளி வீதி,***
***உடுப்பிட்டி.*** (51401) *தகவல்:* ***குடும்பத்தினர்.***

### வஸ்தியாம்பிள்ளை அருளானந்தம்

*(துரைராஜா)*



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வஸ்தியம்பிள்ளை அருளானந்தம் (துரைராசா) நேற்று (18.06.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரேசம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வஸ்தியாம்பிள்ளை, றவேகியத்தின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அருளப்பு சலமையின் மருமகனும் காலஞ்சென்ற ராசாத்தியம்மா மற்றும் அந்தோனியாப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் ராசமலர் பத்திமா, இதயராணி (ஜேர்மனி), சிறிஸ்கந்தராஜா (பிரான்ஸ்), சந்திரராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நீக்கிலாப்பிள்ளை, ராசா, றஞ்சன், சந்திரகுமாரி, அனுசா ஆகியோரின் மாமனும் ராஜ்- கலைச்செல்வி (பிரான்ஸ்), றஜனி - பிரேம்குமார், ஜெனிற்றா - நிக்சன், கலிஷ்ரா, கஜேந்தினி, நிசாந்தன், நிரோஜன், நிரஞ்சனா, ஜிவிந், சியத், தர்ஷி, சறினோ, ஏன்ஜெல், ஜொனி, சனோஜன், சமீரா, பிரவீன் ஆகியோரின் பேரனும் சானுஜாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.06.2006) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பூதவுடல் நல்லடக்கத்திற்காக காக்கை தீவு சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (51350) **தகவல்:** **பிள்ளைகள்.**

### இராமுப்பிள்ளை ஆறுமுகம்

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட இராமுப்பிள்ளை ஆறுமுகம் நேற்று (18.06.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தெய்வானையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகம்மா, பொன்னம்பலம் (சிந்தாமணி பிள்ளையார் கோயில், வவுனியா), புனிதராணி (வவுனியா), செல்வராசா (முருகன் களஞ்சியம், மீசாலை), அன்னலட்சுமி (வவுனியா), ஆனந்தராசா (கனடா), மோகனராசா (லண்டன்), கலாதேவி (கனடா), இந்திராதேவி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நடராசா, விமலாதேவி, துரைராசா, புவனேஸ்வரி (பவா), ஞானகுரு, புனிதவதி, ஈஸ்வரி, சந்திரசேகரம், சிறிஸ்கந்தராசா ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியா, வெளிவட்ட வீதி, சிந்தாமணி பிள்ளையார் கோவிலடி இல்லத்தில் இன்று (19.06.2006) திங்கட்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
*T.P.No.: 024 222 2717.* (51406) **ஆ.பொன்னம்பலம்** **(மகன் -வவுனியா).**

### திருமதி திரேசா தவமணி மார்செலின்

*(இளைப்பாறிய ஆசிரியர் - தவமணி ரீச்சர்- யா/ மயிலணி வித்தியாலயம்)*



நாக்கியம்புலம், சுன்னாகத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசா தவமணி மார்செலின் நேற்று (18.06.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இமானுவேல் முத்துத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், லூக்காஸ் மார்செலின் (இளைப்பாறிய ஆசிரியர் - யா/ மயிலணி வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும் அன்ரன் லூக்தவராஜா (கனடா) மேரி காமல் ரதினி (பிரான்ஸ்), நொயிலின் மாலினி (நோர்வே), காலஞ்சென்ற லூசிலா சிலோஜினி, யூடிற்ற வதனி (பிரான்ஸ்), கிறிஸ்ரா ராகினி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாக்கியம்புலம்,*
*சுன்னாகம்.* (51408) **தகவல்:** **லூக்காஸ் மார்செலின்** **(கணவர்).**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தினுள் புலிகளின் ஊடுருவலைத் தடுக்க கடலில் ரோந்து, கண்காணிப்புக்கு ஏற்பாடாம்!

## ‘மாலைச்சுடர்’ இணையத்தளத்தில் செய்தி

சென்னை, ஜூன் 20

இலங்கையில் படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் போர் மூண்டுள்ளதையடுத்து, தமிழகத்திற்குள் புலிகள் ஊடுருவலை தடுக்கும் வகையில் கடலோர மாவட்டங்களில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடலில் ரோந்து படகுகள் 24 மணி நேரமும் ரோந்து சுற்றவும், சோதனைச் சாவடிகளை அதிகரித்து வாகன சோதனைகளை தீவிரப்படுத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் ஆயிரம் பொலீசார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று ‘மாலைச்சுடர்’ இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் கடந்த இரண்டு நாட்களாக விடுதலைப்புலிகளுக்கும், இலங்கை இராணுவத்திற்கும் இடையே போர் மூண்டு தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. இதன் காரணமாக தமிழர் பகுதி களான வவுனியா, திரிகோணமலை, மன்னார் ஆகிய இடங்களிலிருந்து குடும்பம் குடும்பமாக தமிழர்கள் அகதிகளாக வருவது அதிகரித்துள்ளது. இதுவரை 3 ஆயிரத்து 225 பேர் அகதிகளாக தமிழகத்திற்கு வந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். தற்போது இலங்கையில் போர் தீவிரமடைந்துள்ளதை அடுத்து அகதிகள் வருகை மேலும் அதிகரிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு வருகின்ற அகதிகளுடன் விடுதலைப் புலிகளும் சேர்ந்து தமிழகத்திற்குள் ஊடுருவுவதை தடுப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ராமேஸ்வரத்திற்கு வரும் அகதிகள் தீவிரமாக சோதனையிடப்பட்டு, விசாரிக்கப்பட்டு அவர்கள் சாதாரண மக்கள் என உறுதி செய்யப்பட்ட பின்னரே அகதிகள் முகாமுக்குள் அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் தமிழ்நாடு கடலோர காவல் படையின் சார்பில் ஆயிரம் பொலீசார் கொண்ட தனிப்படை அமைக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

சென்னையிலிருந்து ராமேஸ்வரம் வரை உள்ள 60 சோதனைச் சாவடிகளில் கூடுதல் பொலீசார் பணிக்கமர்த்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக 40 சோதனைச் சாவடிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தவிர 12 கடல் காவல் நிலையங்கள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கரையோரத்தில் ரோந்து நடவடிக்கை பலப்படுத்தப்பட்டிருப்பதுடன் கடலிலும் ரோந்து நடவடிக்கைக்கென படகுகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன. இவை 24 மணி நேரமும் ரோந்து சுற்றி ஊடுருவலை கண்காணிக்கும்.

### தமிழக மீனவர் காயம்

ராமேஸ்வரம் அருகே கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை சுட்டதில் ஒரு மீனவர் படுகாயமடைந்தார். இது குறித்து கூறப்படுவதாவது:- ராமேஸ்வரம் தீவில் உள்ள தங்கச்சிமடம் விக்டோரியா நகரை சேர்ந்தவர் அந்தோணிஅடிமை. இவருக்கு சொந்தமான படகில் நம்புராஜ், ராஜேந்திரன், நம்புவேல் உட்பட 4 மீனவர்கள் நேற்றுமுன்தினம் இரவு கடலில் மீன் பிடிக்க சென்றுள்ளனர்.

ராமேஸ்வரத்திற்கு அப்பால் நடுக்கடலில் நள்ளிரவு 12 மணியளவில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அப்பகுதியில் வந்த இலங்கை கடற்படையினர், இந்த மீனவர்களின் படகு மீது துப்பாக்கிகளால் சுட்டனர். இதில் மீனவர் நம்புராஜுக்கு (வயது 21) முகத்தில் காயம் ஏற்பட்டது. இதில் அவர் பலத்த காயமடைந்தார்.

உடனடியாக படகில் இருந்த ஏனைய மீனவர்கள் படகை திருப்பிக்கொண்டு அதிகாலை 4 மணியளவில் ராமேஸ்வரத்திற்கு திரும்பினார்கள். அங்கு நம்புராஜுக்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு ராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பவம் ராமேஸ்வரம் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கடல் எல்லையை தாண்டி மீனவர்கள் மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என்று அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

## பிரிட்டனில் ஆர்ப்பாட்டம்

இலங்கையில் தமிழ் மக்கள் மீது படையினர் மேற்கொண்டுவரும் கொலைகள், வன்முறைகளை மேற்குலக மக்களின் கவனத்திற்குக் கொண்டுவரும் வகையில் பிரிட்டனில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

லண்டனிலுள்ள லோட்ஸ் கிரிக்கெட் மைதானத்தில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் இலங்கை மற்றும் இலங்கிலாந்து அணிகளுக்கிடையில் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.

அப்போது - சம நேரத்தில் - அந்த மைதானத்துக்குச் சமீபமாக ஒன்றுதிரண்ட நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள், அரசின் கொலை வெறியாட்டங்களை வெளிப்படுத்தும் வகையிலான வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகள், சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கறுப்பின மக்கள் ஒடுக்கப்பட்டபோது தென்னாபிரிக்க கிரிக்கெட் அணிக்குத் தடைவிதிக்கப்பட்டதுபோன்று இலங்கைக் கிரிக்கெட் அணிக்கும் தடைவிதிக்கப்படவேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர். (க)

## நோர்வேயின் தூதுவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றிய சிக்கல் -

போன்ற விடயங்களை ஆராய்வதும், இவ்விவகாரங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைத் தீர்மானிப்பதும் இவ்விருவரினதும் உத்தேச கிளிநொச்சி விஜயத்தின் முக்கிய நோக்கங்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி இருவரும் வன்னிக்கு விரைவில் விஜயம் செய்யும் திட்டமுள்ளது என்பதை ஊர்ஜிதப்படுத்திய கொழும்பில் உள்ள நோர்வேத் தூதரக வட்டாரங்கள், அதற்கு முன்னர் தற்போது இலங்கைக்கு வெளியே இருக்கும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் கொழும்பு திரும்பவேண்டும் என்றும் தெரிவித்தன.

இதேசமயம் -

ஒஸ்லோ சந்திப்பு பயனின்றி முடிந்த நிலையில், ஐந்து விடயங்களைத் தெளிவுபடுத்தக் கோரி விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கும், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் நோர்வே அமைச்சரும் அனுசரணைப் பணிப்பொறுப்பாளருமான எரிக் சொல்ஹெய்ம் எழுதிய கடிதத்துக்கு புலிகளின் பதில் தயாராகியிருப்பதாகத் தெரிகின்றது.

இவ்விடயத்தில் இலங்கை ஜனாதிபதியின் தரப்புப் பதில் அவரது அரசின் சமாதான செயலகத்தினால் அனுப்பப்பட்டிருப்பதால், அது போன்று புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பதிலும், புலிகளின் சமாதான செயலக மட்டத்திலிருந்து நோர்வே அமைச்சர் எரிக் சொல்ஹெய்முக்கு அனுப்பி வைக்கப்படும் என ஒரு தகவல் தெரிவித்தது. (உ)

## அப்பாவி மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுகள் கிடைத்துள்ளன எனப் பிரஸ்தாபித்தோம்.

கடற்படை அதிகாரிகள் கொண்ட சந்திப்பு ஒன்றைப் பலாலியில் ஏற்பாடு செய்து இந்த விடயம் குறித்து ஆராய்ந்து முடிவு செய்யலாம் என்று தளபதி தெரிவித்தார்.

படையினரின் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக ஆராயும் படை அதிகாரிகள் கொண்ட குழுவினரும் சந்திப்பில் கலந்து கொண்டனர். படையினர் தொடர்பான மனித உரிமை மீறல் குறித்துத் தெரிவித்தால், நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் உறுதிமொழி வழங்கினர்.

படையினர் இரவு வேளைகளில் வீடுகளில் தேடுதல் நடத்துவது, அச்சமயம் மக்களுக்கு தொல்லை கொடுப்பது, அடையாள அட்டைகளைப் பெறுவது, கறுப்புத் துணியால் முகத்தை மூடி படையினர் நடமாடுவது ஆகிய விடயங்களையும் தளபதியிடம் பிரஸ்தாபித்தோம்.

அந்த விடயங்களைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுப்பதாக தளபதி உறுதிமொழி வழங்கினார்.

முன்னாள் இணைப்பதிகாரி ரோகித பிரியதர்சனவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் குறித்தும் பிரஸ்தாபித்தோம் - இப்படி இணைப் பதிகாரி மேலும் தெரிவித்தார்.

## முருகன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மயங்கி வீழ்ந்தமை வேலூர் சிறைச் சாலையில் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் முருகன் - நளினி தம்பதிகள் கைதாகி, வேலூர் சிறையில் தண்டனை அனு பவித்து வருகின்றனர். இவர்களின் மகள் அரித்திரா, இலங்கையிலிருந்து தமிழகம் வந்து தங்கிப் படிப்பதற்காக மாணவர் ‘விஸா’ வுக்கு விண்ணப்பித்திருந்தார்.

ஆனால், விஸா கொடுக்க அரசு மறுத்து வருகிறது. இதைத் தொடர்ந்து தங்கள் மகளுக்கு ‘விஸா’ வழங்கக் கோரி கடந்த நான்கு நாட்களாக வேலூர் சிறையில் முருகன் - நளினி தம்பதிகள் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். நான்காவது நாளாக நேற்று முன்தினம் உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து நளினி மயக்கம் போட்டு வீழ்ந்தார். இதனால், சிறையில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து சிறை மருத்துவர்கள் நளினிக்கு சிகிச்சை அளித்தனர். உண்ணாவிரதத்தைக் கைவிடக் கோரி இருவரிடமும் சிறைத்துறை அதிகாரிகள் பேச்சு நடத்தி வ்ருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை கொக்குவில் கிழக்கில் ஒரு பகுதி இராணுவத்தினரின் சுற்றிவளைப்புக்கு உட்படுத்தப்பட்டது.

அதிகாலை 4.30 மணிமுதல் காங்கேசன்துறை வீதி, சபாபதி வீதி, பிறவுண் வீதி, இராமநாதன் வீதி மற்றும் கொக்குவில் - ஆடியபாதம் வீதிப் பகுதிகளில் இராணுவத்தினர் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். காலை 6 மணிமுதல் வீடு வீடாகச் சென்ற படையினர் வீடுகளில் உள்ளவர்களை அழைத்து பார்வையிட்டதுடன் இளைஞர், யுவதிகளை விசாரணை செய்தனர்.

அதுமட்டுமன்றி சுற்றிவளைப்பின்போது தாம் சந்தேகம் கொண்ட இளைஞர் யுவதிகள் சுமார் 300 பேரை தாவடியில் உள்ள இராணுவ முகாமுக்கு அருகில் உள்ள வீட்டிற்கு அழைத்துச் சென்ற படையினர் அங்குவைத்து அவர்களைப் படம் பிடித்தனர்.

இதேநேரம் காலையில் சுற்றிவளைப்பு என அறியாமல் குறிப்பிட்ட பிரதேசத்தினுள் பிரவேசித்த வழிப் போக்கர்களும் படையினரால் சோதனையிடப்பட்டனர். (86)

## மண்டபம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையிலிருந்து வரும் அகதிகளின் நலன் குறித்து தமிழக அரசு பாராமுகமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகளை நிராகரித்த மேற்படி அமைச்சர்கள், மேலும் இவ்வாறுள்ள நூறுக்கும் அதிக அகதி முகாம்களைப் பார்வையிட்டு அங்குள்ள மக்களின் குறைநிறைகளை தாங்கள் அறியப் போகிறார்களெனவும் அவர்கள் கூறினர். (க)

## தமிழகம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கான முன்னேற்பாடுகள் நடந்து வருகின்றன. அகதிகள் என்ற பெயரில் வெளியாள்கள் ஊடுருவியுள்ளார்களா என்ற சோதனையும் நடத்தப்பட்டு வருகிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பதற்றத்தையடுத்து கடலோரக் காவல் படையினரும், அந்தந்த மாவட்ட பொலீஸாரும் தமிழகக் கடலோர மாவட்டங்களில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (க)

## சிகிச்சைக்காக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருந்தார். இந் நிலையில் அவர் கடந்த வெள்ளிக்கிழமை சிங்கப்பூர் கொண்டு செல்லப்பட்டார்.

சிங்கப்பூர் விமானத்தில் கடும் பாதுகாப்புடன் அவர் கொண்டு செல்லப்பட்டார். அவருடன் அவரது மனைவி அனோமா மருத்துவர் மற்றும் இராணுவ அதிகாரி ஆகியோர் சென்றுள்ளனர்.

## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேக நபர்கள் தொடர்பில் பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து பொலீஸார் அவர்களைக் கைதுசெய்ய விரைந்தனர். இதன்போது, மேற்படி இரு இளைஞர்களும் சயனைட் உட்கொண்டனர். உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது இவர்களில் ஒருவர் உயிரிழந்தார்.

இதேவேளை, சயனைட் அருந்திய மற்றைய நபர் உடல்நிலை வெகுவாகப் பாதிக்கப்படவில்லை யென்று பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் கூறின. இதேவேளை, கற்பிட்டி முதல் வத்தள்ள வரையான பகுதிகளில் நடத்திய தேடுதலின்போது பாதுகாப்புப் படையினர் மூவரைக் கைது செய்தனர். சயனைட் அருந்தித் தப்பிய இளைஞர் மற்றும் தேடுதலில் கைதுசெய்யப்பட்ட இளைஞர்களிடம் பொலீஸார் தீவிர விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இதன்போதே, கொழும்புத் துறைமுகம் தாக்கப்படவிருந்தமை தொடர்பான தகவல்கள் வெளியாகியிருக்கின்றன எனப் பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் கூறின.

இதேவேளை, இந்த சந்தேக நபர்கள் பயணித்த படகு மற்றும் கைப்பற்றப்பட்ட வெடிமருந்துப் பொருள்கள் தொடர்பில் அரச பகுப்பாய்வாளர்கள் தொடர்ந்து சோதனைகளை நடத்தி வருகின்றனர். இதற்கிடையில் ஜா-எல கடற்பரப்பில் நேற்று முன்தினம் தேடுதல் நடவடிக்கையொன்றில் ஈடுபட்டிருந்த வேளை திடீரெனக் கவிழ்ந்த படகிலிருந்து விழுந்த கடற்படைச் சிப்பாய்கள் மூன்று பேரில் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டிருக்கிறது. ஏனைய இருவரை கடற்படைச் சுழியோடிகள் தேடி வருகின்றனர். முகத்துவாரம் கடற்படைக் காவலரணில் இருந்து சென்ற கடற்படைச் சிப்பாய்களே இந்த விபத்துக்கு ஆளாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## துட்டுவெவவில்....

(முதலாம் புக்கத் தொடர்ச்சி)

இணைந்து தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டபோதும் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

கொல்லப்பட்ட பொலீஸாரின் சடலங்கள் வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டன. கடந்த வியாழக்கிழமை 65 பேரை பலிகொண்ட கிளைமோர் தாக்குதல் இடம்பெற்ற இடத்திற்கு அருகிலேயே நேற்றைய இந்தத் தாக்குதலும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

## காரைநகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடல் பகுதியில் திடீரென் கேட்ட குண்டுச் சத்தங்கள் கரையோர பகுதி மக்கள் மத்தியில் பெரும் பதற்றத்தை ஏற்படுத்தின. கடலில் யுத்தம் நடைபெறுகின்றதோ என்ற அச்சத்தில் மக்கள் பலரும் பீதியுடன் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது.


குறுகிய கால Hardware பயிற்சி நெறி
* Assempling*Installation*Trouble shooting
Microsoft கணனி பொறியியலாளர்களினால் பயிற்சிகள்
மேலதிக விபரங்களுக்கு உடனடியாக தொடர்புகொள்க.
Free Study Pack
MCS 324, Palaly Road, Jaffna. (CD)
CISCO, A+, N+ MCSE கற்கை நெறிகளிற்கான புலமைப் பரிசில்கள்



aat
O/L இல் 6 பாடங்களில் சித்தியா?
Professional Accounting Qualification

விரிவுரைகள் விரைவில் ஆரம்பம்
உடன் பதிவுகளுக்கு
Accountant ஆவதற்கான அரிய சந்தர்ப்பம்
IPAS, 199, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (பிறிமியர் பேக்கரி மேல்மாடி) T.P : 0777-563294
அலுவலகநேரம் : திங்கள், புதன், வெள்ளி,சனி மற்றும் ஞாயிறு (9am-1pm)
(A 49639)



புலமைப்பரிசில் திட்டம் @ AIMS
A/L பரீட்சை எழுதிய மாணவர்களே!
உங்கள் O/L பெறுபேறுகளுக்கு அமைய புலமைப்பரிசில் திட்டம் (விவரம் உள்ளே)



பார ஊர்திகள் தேவை
திருகோணமலை / வவுனியா ஆகிய இடங்களில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சீமெந்தினைகொண்டு வருவதற்கு பார ஊர்தி கூலிக்கு உடன் தேவை.
தொடர்பு கொள்ளவும்:
சிற்றி ஹாட்வெயர்ஸ் அன் ஸ்ரோர்ஸ்,
55 - 57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இலக்கம்:
222 2901.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) ... வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.06.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.